பக்கங்கள் : பதினாறு + II + II

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 21 புதன்கிழமை (03.06.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 167

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

# தேர்தல் ஓகஸ்ட்

## உத்தியோகபூர்வமான திகதி இன்று அறிவிக்கப்படும்

(கொழும்பு)

பாராளுமன்றப் பொதுத் தேர்தல் ஓகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார அதிகாரிகளுடன் கலந்துரையாடிய பின்னர் உத்தியோகபூர்வமான திகதி இன்று அறிவிக்கப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ➤15

| கொரோனா வைரஸ் | பாதிப்பு | 1683 | புதிய தொற்றாளர்கள் | 40 | பலி | 11 |
|---|---|---|---|---|---|---|

## வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணிகள் ஆரம்பமாகியது

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலுக்கான 17 மில்லியன் வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணி நேற்று ஆரம்பமாகியுள்ளதாக அரசாங்க அச்சுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேர்தல் திகதி மற்றும் பாராளுமன்ற கலைப்புக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ➤15

### அனைத்து மாவட்டங்களுக்குமான

## பொதுப் போக்குவரத்துக்கு திங்கள் முதல் அனுமதி

(கொழும்பு)

கொழும்பு, கம்பஹா உட்பட அனைத்து மாவட்டங்களுக்கும் இடையேயான பொதுப் போக்குவரத்துச் சேவைகள் எதிர்வரும் திங்கட் ➤15

## வியாழன், வெள்ளி

### நாடு முழுவதும் ஊரடங்கு

(கொழும்பு)

நாளை 4ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் நாளை மறுதினம் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய இரு தினங்களும் நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படும் என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறி ➤15

### பாண், பணிஸ் உட்பட

## பேக்கரி பொருட்களின் விலை அதிகரிக்கும்

(கொழும்பு)

பாண், பணிஸ் உட்பட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிக்கக்கூடும் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலால் தங்களின் தொழிற்துறை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக அகில இலங்கை ➤15

## எலிக்காய்ச்சல், டெங்கு நாட்டில் பரவும் அபாயம்

### அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

(கொழும்பு)

எலிக்காய்ச்சல் மற்றும் டெங்கு நோய் நாட்டில் பரவும் அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் எலிக்காய்ச்சல் பரவுவதற்கான அபாயம் அதிகம் காணப்படுவதாக தொற்று நோயியல் தடுப்புப் பிரிவு எச்சரித்துள்ளது. இதன் காரணமாக நெல் உள்ளிட்ட ஏனைய விவசாய நடவடிக்கைகளில் ஈடு ➤15

### போதைப் பொருட்களுடன்

## யாழில் நேற்று மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் மற்றும் உரும்பிராய்ப் பகுதிகளில் கஞ்சா மற்றும் கெரோயின் போதைப் பொருட்கள் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 3 பேர் கோப்பாய்ப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். ➤15

### தேர்தலை சவாலுக்கு உட்படுத்தும் மனுக்கள்

## விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலே உயர் நீதிமன்றத்தால் தள்ளுபடி

(கொழும்பு)

பாராளுமன்றை கலைத்தல் மற்றும் ஜூன் மாதம் 20ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமல் தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, புவனெக அலுவிஹாரே, சிசிர த ஆப்ரூ, பிரியந்த ஜயவர்தன மற்றும் விஜித் மலல்கொட ஆகிய ஐவர் அடங்கிய நீதிபதி குழாமின் ➤15

### தரம் 5 புலமைப்பரிசில் மற்றும் க.பொ.த (உ/த) தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞான வினாத்தாள்கள் உள்ளே ☛

### குரும்பசிட்டியில் நேற்றும்

## 23 குண்டுகள் மீட்பு



(அராலி)

தெல்லிப்பழைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குரும்பசிட்டி தனியார் காணியிலுள்ள கிணற்றில் இருந்து குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய நேற்று முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப் பணிகளின்போதே இந்தக் குண்டுகள் மீட்கப் ➤15

### பருத்தித்துறையில்

## காவலாளி சடலமாக மீட்பு



➤15

## இணுவிலில் வாள்வெட்டு இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் காரைக்கால் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற வாள்வெட்டில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இரண்டு தரப்புக்கு இடையே நீடித்து வந்த மோதலே நேற்று வாள்வெட்டுச் சம்பவமாக மாறியது என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

காரைக்காலைச் சேர்ந்த குழு ஒன்று மற்றொரு குழுவை நேற்று முன்தினம் தாக்கியுள்ளது.

அதற்குப் பழிதீர்க்கும் வகையில் நேற்று காரைக்கால் குழுவைச் சேர்ந்தவர்கள் மீது வாள் வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதில் சற்குணம் ➤15

# பக்த அடியார்களுக்கான அறிவித்தல்

வன்னிவிழான் குளம் முத்துமாரி அம்மனின் வருடாந்தப் பொங்கல் விழா எதிர்வரும் 05.06.2020 வெள்ளிக்கிழமை வழமை போன்று இம்முறை நடைபெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் நோய் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வரும் ஊரடங்கு சட்ட காலத்தில் அம்மனின் பொங்கல் விழா வருவதால் அரசாங்கத்தின் அறிவித்தலுக்கு மதிப்பளித்து அடியார்கள் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவதற்காக ஆலயத்திற்கு வருகை தரவேண்டாம் எனவும், அடியவர்கள் தமது வீடுகளிலேயே இருந்து இம்முறை அம்மனை பிரார்த்தனை செய்யுமாறும் கேட்டுக் கொள்கிறோம்.


ஆலய அறங்காவலர்கள் சபை,
வன்னிவிழான் குளம் முத்துமாரி அம்மன் ஆலயம்,
வன்னிவிழான் குளம்,
மாங்குளம்.

(C-9666)

## 31ஆம் நாள் நினைவுதின அழைப்பு

கடந்த 05.05.2020 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் **கணபதிப்பிள்ளை சிவபாதம்**



அவர்களின் அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் இன்று 03.06.2020 புதன்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். அன்று முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(C-9664)

"கமலகம்",
ஐயனார் கலட்டி, பருத்தித்துறை.

இங்ஙனம் - குடும்பத்தினர்.
077 537 0284 / 021 226 3972

## நீங்கா உம் நினைவில்
## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **முத்துக்குமாரு யோகராசா** (வைரவன்)

(மரக்கறி வியாபாரி, பருத்தித்துறை)

திதி.04.06.2020

அன்பு முகம் மறைந்து
இரண்டாண்டு ஆனதே
ஆனாலும் அழியாது எம் நெஞ்சில்
உன் நினைவுகள்
மாறுமோ எம் சோகம்
ஆறுமோ இப் புவியில்
ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும்
ஆறாது அழியாது என்
அன்புச் சகோதரனே!



என்றும் உன் நினைவுடன்
அன்பு நிறைந்த சகோதரி
புனிததாஸ் யோகேஸ்வரி குடும்பம்

பிறப்பு - 13.02.1963
இறப்பு - 28.05.2018

(C-9663)

மாவடி ஒழுங்கை, ஓடக்கரை, பருத்தித்துறை.

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



## அன்பர்களின் வேண்டுகோளுக்கமைய மீண்டும் மனவளக்கலை யோகாப் பயிற்சிகள் ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலால் நடாத்தப்படும் உடல், உள, உயிர் வளத்திற்கான ஆளுமைத் திறனூக்கப் பயிற்சிகள் அன்பர்களின் வேண்டுகோளுக்கமைய ஆரம்பிக்கப்படவுள்ளதால் இந்த அரிய வாய்ப்பினைத் தவறாது பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

- எளியமுறை உடற்பயிற்சி
- எளியமுறை தியானப்பயிற்சி
- காயகல்ப்பப் பயிற்சி
- அகத்தாய்வுப் பயிற்சி

காலம் : 06.06.2020 சனிக்கிழமை தொடக்கம் 12.06.2020 வெள்ளிக்கிழமை வரை

நேரம் : மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரை

குறிப்பு : கொவிட் - 19 சமூக பாதுகாப்பு விதிகளுக்கமைவாக பயிற்சிகள் வழங்கப்படுவதால் மட்டுப்படுத்தப்பட்ட பயிற்சியாளர்களே உள்வாங்கப்படுவர்.

யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவில் - இல. 81. பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
தொ. இல. : 021 222 2772 (C-9662)

# துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலையின் பணியாளர்
தெய்வேந்திரன் ரகுவர்மன்
அவர்களின் அன்புத் தந்தையார்
அமரர்
**பத்மநாதன் தெய்வேந்திரன்**
(பணியாளர், யா/புலோலி அ.மி.த.க பாடசாலை)

அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன். அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

பாடசாலைச் சமூகம்
யா/வாதரவத்தை விக்கினேஸ்வர வித்தியாலயம்
வாதரவத்தை, புத்தூர்.

(ஏ)

# காலம் அழியா நிஜங்கள்

5வது ஆண்டு நினைவு நாள் | 10வது ஆண்டு நினைவு நாள்



அமரர்
தனபாலசிங்கம் இலங்கேஸ்வரன்
திதி : ஷப்தமி
தோற்றம் - 21.11.1968
மறைவு - 24.05.2015



அமரர்
திருமதி தனபாலசிங்கம் பரமேஸ்வரி
திதி : திரியோதசி
தோற்றம் - 10.02.1940
மறைவு - 26.05.2010

ஏற்றுக்கொள்ளவும், தாங்கவும் முடியாத
இழப்புகளிலும் துயரத்திலும் விதிமேல் பழிபோட்டு
மனதைத் தேற்றிக்கொள்வோம்!
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

க.தனபாலசிங்கம் குடும்பத்தினர்
சசிகை, அல்வாய் வடக்கு.

(C-9665)

# சூழ்நிலைகள் சரியில்லை எனக் கருதி

# எமது அரசியல் அபிலாசைகளை கைவிடக்கூடாது

## தமிழ் மக்கள் பேரவை அறைகூவல்

(யாழ்ப்பாணம்)

**நீண்டகாலமாக பல இக்கட்டான சூழ்நிலைகளினூடாக பயணித்த அனுபவம் அசாதாரண சூழ்நிலையை வெற்றிகொள்ள எமக்குக் கைகொடுக்கும். எனவே இடர்களை வெற்றிகொள்ளத் துல்லியமான திட்டமிடலுடன் ஒன்றுபட்டு செயற்பட தமிழ் மக்கள் பேரவை அழைப்பு விடுத்துள்ளது.**

உலகமே எதிர்பார்த்திராத தருணத்தில் கொவிட்-19 எனப்படுகின்ற ஒருவகைகொரோனோ வைரஸ் தனது தாக்குதலை ஆரம்பித்து அனைத்துலகையுமே நிலைகுலைய வைத்திருக்கிறது. இதன் நேரடியான மற்றும் மறைமுகமான தாக்கங்கள் குறைந்தபட்சம் இன்னும் 3-4 ஆண்டுகள் வரையாவது தொடருவதற்கான தெளிவான சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

இந்தச் சூழ்நிலையில் எமது சுகாதார, பொருளாதார, கல்வி, அரசியல், சமூக ஸ்திரத்தன்மையை தக்கவைத்து பாதுகாத்து மேம்படுத்துவதற்கான திட்டமிடல்களும் தயார்படுத்தல்களும் உத்வேகம் பெற வேண்டிய ஒரு தேவை எழுந்திருப்பதுடன், இதை குறுகிய கால, இடைக்கால, நீண்டகால கண்ணோட்டங்களுடன் செயற்படுத்த வேண்டியுமிருக்கிறது.

மரத்தினாலான கோடரிப் பிடியை கையகப்படுத்தியே மரங்கள் வெட்டப்படுகின்றன. அதேபோலவே இந்த எதிரி வைரசும் எம் கலங்களுக்குள் புகுந்து எமது சொந்தக் கலங்களையே தம்வசப்படுத்தி எம் உடலினுள் பெருக்கெடுத்து எம்மை அழிக்கத் துணிந்து நிற்கிறது. இதுவே பொதுவாக காலம் காலமாக எதிரிகளின் தந்திரோபாயமாகவும் இருந்து வருகிறது.

எனவே நாம் பிறகாரணிகளாலும் சூழ்நிலைகளாலும் நோய்க்கிருமிகளாலும் கையகப்படுத்தப்பட்டு தாக்கங்களையும் அழிவுகளையும் சந்திக்காமல் தடுப்பதற்கு எம்மைத் தயார்படுத்தும் திட்டங்களில் ஒன்றுபடவேண்டிய அவசியம் உணரப்படுகிறது. ஒன்றுபட்டு நாம் தனிமனிதர்களாகவும் சமூகமாகவும் தேசமாகவும் பல கடமைகளை அமைதியாகவும் ஆர்ப்பரிப்பு இல்லாமலும் நிறைவேற்றவேண்டிய தேவையிருக்கிறது. சமூக இடைவெளியைக் கடைப்பிடிப்பது என்பது நாம் சமூகத்திலே தனித்தனி மனிதர்களாக பிரிந்து இயங்குவது என்று அர்த்தப்படாது. உண்மையிலேயே நாம் ஒற்றுமையான சமூகமாக தேசமாக ஒன்றிணைந்து செயற்படவேண்டிய தேவை முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் தற்பொழுது எழுந்திருக்கிறது.

பொருளாதார நெருக்கடிகள், தனிமைப்பட்டுப்போனது போல உணரும் மனத்தாக்கங்கள், கொரோனா தாக்கங்கள், கொரோனாவை பூச்சாண்டியாக காட்டி நிகழும் அராஜகங்கள், அடிக்கடி வந்து போகும்புலம்பெயர் உறவுகளின் தம் சொந்தங்களிடம் வந்து போக முடியாத நிலை, அதன் ஏக்கங்கள், பொது நிகழ்வுகளில் கூடச் சந்தித்து மனம் ஆறமுடியாத உள நெருக்கீடுகள், உதவிக்கு யாருமற்ற முதியோர். எனப் பல்வேறுபட்ட சவால்களை திடீரென எதிர்கொள்ள வேண்டியிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்திலே அயலவர்களினதும் ஊரவர்களினதும் ஒன்றிணைவும் ஒருங்கிணைந்த செயற்பாடுகளும் மேம்படுத்தப்படவேண்டிய தேவை உணரப்படுகிறது.

வேலையிழப்பு, வருவாய் குறைதல், புலம்பெயர் தேசங்களிலிருந்து தத்தம் குடும்பங்களுக்கு கிடைத்துவரும் வருவாய் குறைவு, அதிகரித்த செலவீனங்கள் போன்றவற்றால் எமக்கு ஏற்பட்டிருக்கும், ஏற்படப்போகும் மிகப் பாரிய பொருளாதார நெருக்கடிகளைக் குறைப்பதற்கு தனிநபர்களாகவும் குடும்பமாகவும் சமூகமாகவும், தமிழ்த் தேசமாகவும் நாம் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியிருக்கிறது. இதற்குப் பல துறைசார் வல்லுநர்கள் பங்களிப்பும் ஆலோசனைகளும் வழங்க ஆயத்தமாக இருக்கிறார்கள்.

குடிவகைபாவனை, புகைத்தல் போன்றவற்றிற்கான செலவீனங்களை நிறுத்துதல், ஆடம்பர செலவீனங்களைக் குறைத்தல், உள்ளூர் உற்பத்தி முயற்சிகளை ஊக்கப்படுத்துதல், உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் பயன்பாட்டை ஊக்கப்படுத்துதல், தற்சார்புப் பொருளாதாரத்தையும், விவசாயத்தையும் கட்டியெழுப்புதல், உள்ளூரிலிருந்தோ புலம்பெயர் தேசங்களிலிருந்தோ கிடைக்கும் வருவாய்களை திட்டமிட்டு செலவு செய்தல், பிறரின் நல்ல முயற்சிகளைப் பாராட்டி ஊக்கப்படுத்துதல், அயலவர்கள், ஊரவர்களின் முயற்சிகளை சரியான திசையில் நெறிப்படுத்துதல் போன்ற சில ஆரம்ப முயற்சிகள் பயனுடையதாக அமையும்.

எமது கல்வி நிலையைத் தக்கவைத்து மேம்படுத்துவதற்கு கற்பித்தல், கற்றல் பொறிமுறைகளை சூழ்நிலைகளுக்கேற்றவாறு மாற்றியமைக்கும் முயற்சிகள் பல ஆரம்பிக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. இவை ஒருங்கிணைக்கப்பட்டு குறைகள் நிவர்த்தி செய்யப்பட்டு, மெருகேற்றப்படுவதுடன் அனைத்து மட்ட மக்களையும் சென்றடையும் வழிவகைகளையும் செயற்படுத்த வேண்டும்.

நாம் பின்னடைந்துவிட்டோம், தளர்ந்து விட்டோம், சூழ்நிலைகள் சரியில்லை எனக் கருதி எமது அரசியல் அபிலாசைகளைக் கைவிடுவது அர்த்தமற்றதும் ஆபத்தானதுமாகும். இந்தச் சின்னஞ்சிறு கொரோனா வைரஸ் எமக்கு ஒரு பாடத்தைக் கற்பித்து நிற்கிறது. ஒரு சொந்தமான கட்டமைப்போ, கலமோ இல்லாத இந்த வைரஸ் பல கண்டங்கள் தாண்டி பலரைத் தன் கையகப்படுத்தி, சுய விளம்பரமோ, சுய அறிமுகமோ இல்லாமல் செயலில் இறங்கி ஒரு குறுகிய காலத்திலே உலகையே புரட்டிப் போட்டிருக்கிறது. தூய்மை இல்லாது, கூட்டம் சேருவது மனித குலத்தின் பெரும் பலவீனம் என்பதை துல்லியமாக அறிந்து திட்டமிட்டு அதனூடாக தனது பரம்பலை விஸ்தரித்து வருகிறது.

தொற்றுநோய்களைத் திட்டமிட்டு வெற்றி கொண்டு விட்டோம். இனி எமது இலக்கு தொற்றாத நோய்கள் என்று கொக்கரித்த உலகின் உச்சந்தலையிலே இந்தச் சின்னஞ்சிறு வைரஸ் ஓங்கி அறைந்திருக்கிறது. இந்த நுண்ணிய வைரஸின் அசுர வல்லமையில் இருந்து நாம் கற்றுக்கொள்வதற்கு ஏராளம் இருக்கிறது.

அன்று தொட்டு இருந்து வரும் எமது கலாசார விழுமியங்கள் இந்த நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த எமக்கு உறுதுணையாக அமையும். வெளியே சென்று கை, கால் கழுவி வீட்டினுள் செல்லுதல், மரணவீடு, வைத்தியசாலைகள் அல்லது சனக் கூட்டமான இடங்களுக்கு சென்றால் குளித்து விட்டு வீட்டினுள் செல்லுதல், மற்றவர்களை வணக்கம் சொல்லி வரவேற்றல், வீட்டில் சமைத்த உணவை உண்ணுதல், எமது பாரம்பரிய உணவு வகைகளை உண்டு நோய் எதிர்ப்பு சக்தியை வளர்த்தல் போன்ற சாதாரண நடவடிக்கைகள் எம்மைக் காக்க உறுதுணையாக அமையும்.

அத்துடன் நீண்டகாலமாக பல இக்கட்டான சூழ்நிலைகளினூடாக பயணித்த அனுபவம் இந்த அசாதாரண சூழ்நிலையை வெற்றிகொள்ள எமக்குக் கைகொடுக்கும். இந்த இக்கட்டான சூழ்நிலையில் முகம் தெரிந்த, முகம் தெரியாத பல தனிநபர்களும் குழுக்களும் அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஒற்றுமையாகச் செயற்படுவது மகிழ்ச்சியைத் தருகிறது. இந்தத் தேர்தல் அரசியல் கடந்த ஒற்றுமை இன்னும் வலுப்பெறவேண்டியது இன்றைய தேவையாகி நிற்கிறது.

இன்றைய சூழ்நிலையை எதிர்கொள்ள, வெற்றிகொள்ள உங்கள் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் தமிழ் மக்கள் பேரவை எதிர்பார்த்து நிற்கிறது. உங்களது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் tpcmediasl@gmail.com என்ற எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளது. (ஜ-4)



## குருநாகல் மாவட்டத்தில்

# மேலும் சில இடங்களில் வெட்டுக் கிளிகள்

## பீதியில் விவசாயிகள்

(கொழும்பு)

குருநாகல் மாவத்தகமவில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட ஒருவகை வெட்டுக்கிளிகள், அந்தப் பகுதியில் மேலும் சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் பரவியுள்ளதாக விவசாய அதிகாரிகள் தெரிவித்தனர். மாவத்தகம பிரான்சிஸ்கா பகுதியில் நேற்று முன்தினம் இந்த வகையிலான வெட்டுக்கிளிகள் முதன்முறை யாக இனங்காணப்பட்டன. இந்த நிலையில், அந்த வெட்டுக்கிளிகள் தொடர்பில் ஆராய்வதற்கு விவசாயப் பணிப்பாளர் உள்ளிட்ட தரப்பினர் அந்த பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்து பார்வையிட்டிருந்தனர்.

குறித்த வெட்டுக்கிளிகள் தொடர்பான விபரங்கள் இதுவரை கண்டறியப்படவில்லை. மரவள்ளி, தென்னை மரம், சோளம், வாழை போன்ற பயிர்களை தாக்கியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த நிலையில், அவற்றை அழிப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது குருநாகல்மாவட்டத்தின்விவசாய அதிகாரிகளால் முன்னெக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# மாணவர்களுக்கான Zoom வகுப்பு நேர அட்டவணை

| நிறுவனம் | திகதி | நேரம் | தரம் | பாடம் | ஆசிரியர் பெயர் | பாடசாலை பெயர் | Meeting ID | Password |
|---|---|---|---|---|---|---|---|---|
| வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் | 04.06.2020 06.06.2020 | 8.00 பி.ப | A/L (2020) | இரசாயனவியல் (பௌதீக இரசாயனவியல் வினாத்தாள் வகுப்பு) | ஜே.டினேஸ் | கொழும்பு இந்து கல்லூரி | 856 4622 4905 | Che@02 |
| வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களம் | 03.06.2020 05.06.2020 | 6.00 மு.ப-7.30 மு.ப | 05 | சுற்றாடல்சார் செயற்பாடுகள் பகுதி - 1 | ப.சசிரதன் | வலயக்கல்வி அலுவலகம் கிளிநொச்சி | 977 149 6807 | gr5 |
| வவுனியா வடக்கு வல யக் கல்வி அலுவலகம் | 04.06.2020 | 4.00 பி.ப - 5.30 பி.ப | O/L | கணிதம் | ல.சதீஸ் | வ/நொச்சிமோட்டை க.உ.வி, வவுனியா | 815 8132 3388 | vn@2020 |
| வவுனியா வடக்கு வல யக் கல்வி அலுவலகம் | 05.06.2020 | 4.30 பி.ப - 6.00 பி.ப | O/L | கணிதம் | ல.சதீஸ் | வ/நொச்சிமோட்டை க.உ.வி, வவுனியா. | 874 5225 8807 | vn@2020 |

## தொழில்நுட்பவியல் கல்லூரியில் ஒன்லைன் மூலமான கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

தொழில்நுட்பவியல் கல்லூரியில் இயங் கலை (ஒன்லைன்) மூலமான கற்கை நெறிக ளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு ள்ளன. இந்த இலவசமான இயங் கலை **(Online)** மூலமான இக்கற்கை நெறிக ளுக்கான தகைமைகளாவன,

1. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வியலாளர் **ICT (NVQ 4)** கற்கை நெறிக்கு:- க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு அமர் வுகளுக்கு மேற்படாமல் தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் உட்பட ஆறு (06) பாடங் களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

2. **Advancing Career Skills (ACS) English** கற்கை நெறிக்கு:- க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் திறமைச் சித்தி உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

3. **Developing Career Skills (ACS) English** கற்கை நெறிக்கு:- க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆங்கிலம் உட்பட ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

4. அலுவலக நடைமுறைகள் தொடர்பான அறிமுகம் **(Procedure in an Office)** கற்கை நெறிக்கு:- க.பொ.த (சா/த) பரீட்சையில் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மேற்படி கற்கைநெறிகளை பயில விரும்பு வோர் **dtet.gov.lk** எனும் இணையத்தினுள் சென்று இயங்கலை **(Online) application** என்பதனை தெரிவு செய்து அதனூடாக பயில விரும்பும் தொழில்நுட்பவியல் கல்லூரி மற்றும் கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களை எதிர் வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ண ப்பிக்க முடியும். மேலதிக விபரங்களுக்கு தொழில் நுட்பக்கல்லூரியுடன் அல்லது 021 222 2358/021 222 0028 ஆகிய தொலை பேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும் என யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரிப் பணி ப்பாளர் அறிவித்துள்ளார். (ஜ-2-5)

## உயர்தரக்கற்கை-2022 இணையத்தினூடான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

மத்திய கல்வி அமைச்சின் அறிவிப்பிற் கிணங்க 2022 உயர்தரப் பிரிவின் கற்கை நெறிகளுக்கு யா/கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு விண்ணப்பித்த மற்றும் கொக் குவில் இந்துக்கல்லூரியில் கல்வி கற்று உயர் தரத்திற்கு தகுதியான மாணவர்கள் உட்பட அனைவரும் பின்வரும் இணைப் பினூடாக **(httpi//info.moe.gov.lk)** விண்ணப்பத்தை எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாக அனுப்பி வைக்க முடியும் என கல்லூரி அதிபர் எம்.ஞானசம்பந்தன் அறிவித்துள் ளார். (ஜ-4)


# 31ம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம்
26 – 07 – 1939

மறைவு
07 – 05 – 2020

அமரர்
**பொன்னுத்துரை தனபாலசிங்கம்**
ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை

அமரரது அந்தியேட்டி கிரியைகள் 06-06-2020 தினத்தில் அவரது இல்லத்தில் அதிகாலை 5 மணிக்கு மேற்கொள்ளப்பட்டு அஸ்தி ஊறணி தீர்த்தக்கடலில் சங்கமிக்கவைக்கப்படும். இவ்வழைப்பினை சகலரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர் (C-9667)


## இடுகம கொவிட்-19 சமூக பாதுகாப்பு நிதிய மீதி ஆயிரத்து 217 மில்லியனாக அதிகரிப்பு



(கொழும்பு)

தனிப்பட்ட, நிறுவன அன்பளிப்புகள் மற்றும் நேரடி வைப்புகளுடன் இடுகம கொவிட் -19 சுகாதார, சமூகப் பாதுகாப்பு நிதியத்தின் வைப்பு மீதி ஆயிரத்து 217 மில்லியனாக அதிகரித் துள்ளது.

சோமாவதி ரஜமகா விகாராதிபதி கலாநிதி பஹமுனே ஸ்ரீ சுமங்கள நாயக தேரர் 5 இலட் சம் ரூபாவை நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளதுடன், அதற்கான காசோலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் சோமாவதி புண்ணிய பூமிக்குச் சென்ற வேளையில் ஜனாதிப தியிடம் கையளிக்கப்பட்டது.

நேபாளத்திலுள்ள மருத்துவ மாண வர்களின் பெற்றோர் சங்கம் அன்பளிப்புச் செய்த 12 இலட்சம் ரூபாவுக்கான காசோலை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக் ஷவிடம் கையளிக்க ப்பட்டது.

கொழும்பு மாநகர சபை பணிக் குழாமி னர் 12 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவை நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்திருந் தனர். அதற் கான காசோலையை மேயர் ரோசி சேனாநாயக்க நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதிடம் கையளித்தார்.

தேசிய சம்பள ஆணைக் குழுவின் தலைவர் சந்திராணி சேனாரத்ன 50 ஆயிரம் ரூபாவையும், நீதியமைச்சின் செயலாளர் திருமதி எஸ்.எம். மொஹ மட் 25 ஆயிரம் ரூபாவையும், சுற்றுலா, விமான சேவைகள் இராஜாங்க அமைச்சின் செய லாளர் எம்.எஸ். எஸ்.எஸ்.பெர்னா ண்டோ 50 ஆயிரம் ரூபாவை யும், **LH Piyasena & Comp any (Pvt) Ltd** நிறுவனம் ஒரு மில்லியன் ரூபாவையும் நகர அபிவிரு த்தி, நீர் வழங்கள், வீட்டு வசதிகள் அமைச்சின் பணிக்குழாமினர் ஒரு இல ட்சத்து 89 ஆயிரத்து 225 ரூபாவையும் நிதி யத்திற்கு அன்பளிப்புச் செய்துள்ளனர்.

தற்போது இடுகம கொவிட்- 19 சுகா தார, பாதுகாப்பு நிதியத்தின் மீதி ஆயிரத்து 217 மில்லியன் ரூபாவாகும்.

உள்நாட்டு, வெளிநாட்டு நன்கொடை யாளர்கள் இக்கணக்கிற்கு பங்களிப்பு செய்து வருகின்றனர். காசோலைகள் அல்லது டெலிகிராப்கள் மூலமும் **www. itukama.lk** என்ற இணையத்தளத்தின் ஊடாகவோ அல்லது **#207#** என்ற இலக் கத்துடன் தொடர்பு கொண்டு பங்களிப்பை செய்ய முடியும். 076 070 0700/ 011 232 0880/ 011 235 4340/ 0112424012 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும். (ஜ-4-8)

# இராசிபலன்

03.06.2020
வைகாசி 21, புதன்கிழமை
துவாதசி காலை 7.31 மணிவரை
திரயோதசி பின்னிரவு 5.22 மணிவரை
சுவாதி முன்னிரவு 7.57 மணிவரை
சுபநேரம் 4.22-5.52 மணிவரை
இராகுகாலம் 11.52-1.22 மணிவரை
சந்திராஷ்டமம் உத்திரட்டாதி, ரேவதி
பிரதோச விரதம்

வளவன்


மேஷம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.


ரிஷபம்

கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


மிதுனம்

பெருமைகள் வந்து சேர பிள்ளையாரை வழிபட வேண்டிய நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம்.


கடகம்

செய்தொழில் மேன்மையுண்டு, விருப்பங்கள் நிறைவேற பரம்பொருளை வழிபட வேண்டிய நாள், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


சிம்மம்

பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும் நாள், நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், காரிய அனுகூலமுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு.


கன்னி

திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், எடுத்த காரியத்தை எளிதில் நிறைவேற்றுவீர்கள்.


துலாம்

சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும்.


விருச்சிகம்

தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, உறவினர்களின் சந்திப்பு இடம்பெறலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.


தனுசு

சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் தேடி வரலாம், பொதுவாழ்வில் புகழ்கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மகரம்

பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், கனவுகள் நனவாக பரம்பொருளை வழிபட வேண்டிய நாள்.


கும்பம்

தொழிலில் அதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள், பிரியமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


மீனம்

குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் சூழ்நிலை ஏற்படலாம், வேலைச்சுமை கூடும் நாள், தேக நலனில் அக்கறை தேவை.

ரோஜாவுக்கு எந்தப் பொருள் இட்டாலும் மணக்கும்

# பாதாளக் குழுவைக் கட்டுப்படுத்த விசேட அதிரடிப்படை களத்தில்

(கொழும்பு)

பாதாள உலகக் குழுக்களின் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த நேற்று முதல் நாடு முழுவதும் பொலிஸ் விசேட அதிரடிப்படை களத்தில் இறங்கியது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற முக்கிய சந்திப்பின் அடிப்படையிலேயே குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது பாதாள உலகக் குழுவை ஒழிக்கும் செயற்றிட்டம் விசேட அதிரடிப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த சில நாட்களாக மாளிகாவத்தை மற்றும் மொரட்டுவ பகுதிகளில் பாதாள உலகக் குழுவினர் சவால் விடுக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றனர்.

இவர்களை உடனடியாக கட்டுப்படுத்துமாறு ஜனாதிபதியும் உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில் மேற்குறித்த இரு பிரதேசங்களிலும் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபர்கள் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஜ-8)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



விண்ணில் 1935 . 03 . 10

மண்ணில் 2019 . 06 . 14

அமரர். முருகன் நடுவில்

(திதி: திரயோதசி)

ஓடி உருண்டது உமைப்பிரிந்து ஓராண்டு
வாடி வதங்குகின்றோம் உமைப்பிரிந்து எண்ணி நிதம்
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எம் நெஞ்சமதில் உங்கள் நினைவுகள் நிலைத்திருக்கும்.

(2939)

கரும்பியோடை,
சமரபாகு,
வல்வெட்டித்துறை.

ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


## துப்பாக்கியுடன் பெண்ணொருவர் கைது

(கொழும்பு)

சிலாபத்துறை மறிச்சுக்கட்டி பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கி ஒன்றுடன் பெண் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

சிலாபத்துறை பொலிஸார் மற்றும் கடற்படையினர் இணைந்து குறித்த சுற்றிவளைப்பினை மேற்கொண்டனர்.

குறித்த பிரதேசத்தினை சேர்ந்த 34 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டார். மேலதிக விசாரணைகளை தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-8)


## மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் பொன்னுத்துரை

(சங்கானை பலநோக்கு கூ/சங்க முன்னாள் காவலாளி)



தோற்றம் 22.05.1936 — மறைவு 30.05.2020

சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கனடாவை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் பொன்னுத்துரை கடந்த (30.05.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற மகேஸ்வரி (இலங்கை) மற்றும் திருநாவுக்கரசு (கனடா) ஆகியோரின் சகோதரரும், விஜயறதி (லண்டன்), விஜயசீலன் (கனடா), விஜயபவன் (கனடா), விஜயசந்தர் (கனடா), விஜயகுகன் (கனடா) ஆகியோரின் தந்தையும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் (அதிபர்- நடேஸ்வரா கல்லூரி, காங்கேசன்துறை), நடராசா (கனடா), காலஞ்சென்ற கார்த்திகேசு (கனடா), கதிரவேலு (கனடா), தனவதி (இந்திரா- இலங்கை) ஆகியோரின் மைத்துனரும், நேசரட்ணம் (லண்டன்), குமுதினி (கனடா), விஜயநந்தினி (கனடா), ரஞ்சிதமலர் (கனடா), சுஜேந்தி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சஞ்சி (ஜேர்மனி), சபிதா (லண்டன்) ஆகியோரின் அம்மப்பாவும், ஜனாத், ஜெனீபா, விதுசன், துர்க்கா, தாரணி, ஜெனனி, புவனி, ஓவியா, இலக்கியா, மாசிலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும், ரீனாதேவி, அபினயா, அர்வின் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.06.2020) புதன்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி, சங்கானை.
0777111022

(C-9661)

தகவல்: குடும்பத்தினர்
பெறாமகன் (கு.சொரூபன் - கஜன்).

சண்டிலிப்பாய்-வீணாகான குருபீடம் பதி உறையும் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில்

# மக்களின் இயல்பான நல்வாழ்வுக்கான தன்வந்தரி பகவான் ஹோம ஆராதனை- 16.06.2020 செவ்வாய்க்கிழமை



### சிவபுண்ணிய பூமியின் மகத்துவம்

எமது மண்ணிண் மகத்துவம் இன்றளவில் எம்மைக் காத்தருள்கின்றது. இதற்கு காரணம் எமது பூமி சிவபுண்ணிய பூமியாகும். எங்கும் நிறைந்த இறைவனது ஆலயங்களினால் நிறையப் பெற்ற பிரதேசமாகும்.

இத்தகைய திருவருளுடன் மகான்கள், சித்தர்கள், ஞானிகள், அனுபூதிமான்கள், அருளாளர்கள், முதலானோர்களது திருப்பாதம் நடந்து திரிந்து புனிதப்படுத்திய அற்புதம் நிறைந்த திருமண் இம்மண்.

ஆலயங்களில் பூஜை நடைபெறாத சந்தர்ப்பங்களில் குருமார்கள், அறங்காவலர்கள், பக்தர்கள் மனவேதனையடைகின்றார்கள். இறைவனை தமது உறவின்பால் வைத்து அன்பு செலுத்துகின்றார்கள். ஆலய மணியோசை கேட்கும் பொழுது இறை துணைநிற்பதாக உணருகின்றார்கள். இவ்வாறு இறைவனுடன் ஐக்கியப்பட்ட நிலையில் தான் எமது மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இத்தகைய வாழ்வின் பலன் தான் இன்று இந்தக் கொடிய கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து எம்மைக் காத்து வருகின்றது எனலாம்.

வேறு நாடுகளைப் போலன்றி எமது மண்ணில் இக்கொடிய நோய் கட்டுப்பாட்டில் உள்ளது. எமது மண் சிவபுண்ணிய பூமி. எத்தகைய அழிவும் ஏற்படமாட்டாது. எமது முன்னோர்க்ளும் சித்தர்கள் முதலானோரின் தவப் பயனும் எம்மைக் காத்தருள் புரியும். இத்தவப்பயனைத் தொடர்ந்து தக்க வைப்பதற்கு நாமும் தொடர்ந்து இறை ஆராதனைகளையும் தானதர்மங்களையும் செய்துவர வேண்டும். நாம் செய்யும் அத்தனை அறங்களும் சிவப் பிரீதியாகும்.

காலத்தை உணர்ந்தோர் தம்மாலான தானதர்மங்களையும் சரீர உதவிகளையும் ஆற்றி வருவதைக் காணலாம். தர்மம் செய்வோரை தர்மம் காக்கும். ஒருவருக்கு நோய் ஏற்படுகின்றது என்றால் அதற்கு எமது உடலில் நோய் எதிர்ப்புச்சக்தி இல்லை என உணரலாம். அதற்காக சத்துணவுகள், மாத்திரைகள் முதலியவற்றினை எடுத்துக்கொள்கின்றோம். அதே போன்று தான் உலகளாவிய ரீதியில் மனித குலத்தையே அழித்துவிடுவேன் என அச்சுறுத்தி வரும் கொடிய வைரஸ் தாக்கத்தில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள மருந்து மாத்திரைகளுடன் திருவருள் கவசமும் கண்டிப்பாகத் தேவை.

இறையருள்தான் எம்மை கவசமாக இருந்து முழுமையாகப் பாதுகாக்கும். எனவே நாம் இறை வழிபாடாற்ற வேண்டும்.

எமது சிவ புண்ணிய பூமியின் தலைவனாக சிவப்பரம்பொருள் அருள் தருகின்றார். அவருடைய பரிவாரங்களாக ஏனைத் தெய்வங்கள் அருள்பாலித்து வருகின்றார்கள். இக் கொடிய நோயில் இருந்து எம்மைப்பாதுகாப்பதற்கு நாம் வழிபட வேண்டிய தெய்வம் ஸ்ரீ தன்வந்தரி பகவான் ஆவ்ார். சிவன் அரசனாக இருக்கும் அவையில் தன்வந்தரி பகவான் வைத்தியத்துறை மந்திரியாவார். எனவே இக்கட்டான இவ்வேளையில் நாம் அனைவரும் தன்வந்தரி பகவானை வழிபாடு செய்வது பொருத்தமானதாகும்.

### தீராத நோய் தீர்த்து ஆரோக்கிய வாழ்வு தரும் ஸ்ரீ தன்வந்தரி பகவான்

ஸ்ரீதன்வந்தரி பகவான் ஆயுர்வேதத்தின் கடவுள். தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்த போது அதில் இருந்து தோன்றியவர் ஸ்ரீதன்வந்தரி பகவான் ஆவார். இவர் சாகாமருந்தான அமிர்தத்தினைக் கலசத்தில் ஏந்தி வைத்திருப்பவராவார். மனிதர்களுக்கு தீராத நோய்களைத் தீர்த்து ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவதற்கும் ரோகங்களை சிகிச்சை மூலம் போக்குவதற்கும் ஸ்ரீ மஹாவிஸ்ணு எடுத்த அவதாரமே ஸ்ரீதன்வந்தரி பகவான். கட்டுப்படுத்த முடியாமல் வளர்ந்து கொண்டே வரும் நோய்களை தடைசெய்வதற்கு வழிபாடாற்ற வேண்டிய தெய்வம் ஸ்ரீதன்வந்தரி பகவான் ஆவார். தினமும் அவரது திருநாமங்களை உச்சரிப்பதும் தோத்திரப்பாடல்களை ஓதுவதும் நிறைவான திருவருளைத் தருவதாக அமையும்.

### அடியார்களின் பிரார்த்தனை

கொரோனாத் தொற்றில் இருந்து எமது நாடு விடுபட்டு மக்கள் இயல்பான நல்வாழ்வை பெறுவதற்கு நாம் அனைவரும் ஒன்று கூடி ஓர் இடத்தில் பிரார்த்திப்பது சாத்தியமற்றதாகும். மிகவிரைவில் கொரோனா நோயிலிருந்து விடுபட சண்டிலிப்பாய் வீணாகான குருபீடம் பதியுறையும் ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவிலில் விசேட ஸ்ரீதன்வந்தரி பகவான் ஹோம ஆராதனைகள் நடைபெற உள்ளன. அதற்கு வலுச் சேர்க்கும் வகையில் ஹோமத்திற்குரிய திரவியங்களும் மக்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளன. திரவியங்களைப் பெற்ற மக்கள் தத்தமது இல்லங்களில் சுவாமிப் படங்களுக்கு முன் வைத்து எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை வரை தங்களால் இயன்ற நாட்களில் மாலை 6 மணிமுதல் இரவு 9 மணி வரையிலான நேரத்திற்குள் குடும்ப அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றுகூடி தோத்திரப் பாடலை இயன்றவரை குறைந்தது 30 நிமிடங்களாவது ஓதி அருளுக்கு வலுச் சேர்க்கவும் பிரார்த்தனை செய்த ஹோமத்திரவியங்களை 16.06.2020 செவ்வாய்க்கிழமை அன்று காலை 9 மணிமுதல் மாலை 5 மணி வரை நடைபெறும் பிரார்த்தனையில் சமர்ப்பித்து அருள் பெறுவீர்களாக. ஹோமத் திரவியத்தினையும் தோத்திரப் பாடலையும் இலவசமாக ஆலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

ஸ்ரீ தன்வந்தரி பகவான் மற்றும் ஸ்ரீ மிருத்யுஞ்ஜய பரமேஸ்வர ஹோமம் மாலை 6 மணி முதல் இரவு 8 ம்ணி வரை நடைபெறும்.

இவ்வேளை அடியார்கள் தமது இல்லங்களில் இருந்து தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் நல்வாழ்வு வா்ழ்வதற்கு இறைவனை வேண்டி நிற்போம்.

**சிவஸ்ரீ. சபா. வாசுதேவக்குருக்கள்,**
**குருமுதல்வர், ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவில்**

## வீடு கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

சங்கானை பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஜே/ 159 சங்கரத்தை துணவி கிராமசேவகர் பிரிவில் அரசாங்கத்தினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடு நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட அரச அதிபரினால் வீட்டு உரிமையாளரிடம் கையளிக்கப்பட்டது.

மீள்குடியேற்றம் மற்றும் பொருளாதார அலுவல்கள், புனர்வாழ்வு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில், சுமார் 9 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் நிதியில், இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் போரால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பத்திற்கு நிர்மாணிக்கப்பட்ட வீட்டை யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன், மற்றும் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி ருவான் வணிக சூரிய ஆகியோர் கையளித்தனர்.

இந் நிகழ்வில், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், உதவி அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், இராணுவ உயர் அதிகாரிகள், சங்கானை பிரதேச செயலாளர் உட்பட வட்டுக்கோட்டை பொலிஸ்பொறுப்பதிகாரி உட்பட கிராம சேவையாளர் எனப் பலர் கலந்து கொண்டனர். (2-5-114)

## வழமைக்குத் திரும்புகிறது சாவகச்சேரி வைத்தியசாலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் செயற்பாடுகள் யாவும் வழமைக்குத் திரும்பி வருவதாக வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்தது.

மாதாந்த வைத்திய ஆலோசனைக்காக (கிளினிக்) வருவோர் வைத்தியசாலையின் பின் வாயில் ஊடாக உடல் வெப்பநிலை அளவிடப்பட்ட பின்னர் உள்ளே அனுமதிக்கப்படுவதாகத் தெரிவித்தனர்.


இருப்பினும் கொரோனா அச்ச சூழ்நிலையில் கிளினிக் நோயாளர்களுக்கு இரண்டு மாத காலத்திற்குத் தேவையான மருந்து வகைகளை வீடுகளிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையால் தற்போது வைத்திய ஆலோசனை பெற வேண்டிய கட்டாயம் இருப்பவர்கள் மாத்திரமே வைத்தியசாலையை நாடுகிறார்கள். அதுபோல் பற் சிகிச்சை நிலையத்திலும் நோயின் தாக்கத்தினைப் பொறுத்து சிகிச்சை அளிக்கப்படுகிறது என வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. (ஜ-30)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 170 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 120 | 160 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 150 | 120 |
| தக்காளி | 150 | 130 | 130 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 120 | 120 | 80 |
| கோவா | 100 | 100 | 120 | 120 |
| கரட் | 120 | 150 | 160 | 160 |
| பூசணி | 40 | 40 | 50 | 50 |
| புடோல் | 80 | 100 | 60 | 100 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 250-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 160 | 240 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 200 | 120 | 80 | 120 |
| பயற்றங்காய் | 100 | 160 | 80 | 100 |
| லீக்ஸ் | 120 | 150 | 160 | 160 |
| பீற்றூட் | 80 | 60 | -- | 120 |
| கறிமிளகாய் | 100 | 120 | 170 | 160 |
| முருங்கைக்காய் | 120 | 150 | 200 | 200 |
| போஞ்சி | 250 | 280 | 240 | 300 |
| கத்தரிதம்புள்ள | 160 | 160 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 30 | 40 |
| தேசிக்காய் | 400 | 400 | 450 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 45 | 40-50 | 40-60 |
| இராசவள்ளி | 200 | 200 | -- | 250 |
| வெங்காயப்பூ | 200 | 220 | -- | -- |
| முள்ளங்கி | 60 | 100 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 25 | 40 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | -- | 50 | 100 |

# சிறைச்சாலைகளிலிருந்து வழிநடத்தப்படும் குற்றச்செயல்கள் நிறுத்தப்படல் வேண்டும்

## ஜனாதிபதி கோட்டா எச்சரிக்கை



(கொழும்பு)

பாதாள உலகக்குழுத் தலைவர்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் சிறைச்சாலைகளில் இருந்து, குற்றங்களை வழிநடத்தும் செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எச்சரித்தார்.

நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சிறைச்சாலைகளின் உள்ளக செயற்பாடுகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் இடம்பெறும் பல்வேறு குற்றங்கள் மற்றும் அதிகளவான போதைப்பொருள் கடத்தல் செயற்பாடுகள் சிறைச்சாலைகளில் இருந்து வழிநடத்தப்படுவதாக உறுதியான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறித்த நிலை சரிசெய்யப்படல் வேண்டும். அதற்கமைய சிறைச்சாலைகளினுள் கையடக்கத் தொலைபேசிப் பாவனையை முற்றாகத் தடைசெய்ய வேண்டும். சிறைச்சாலைகள் திணைக்களத்தில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பிலும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என அவர் மேலும் சுட்டிக் காட்டினார். (ஜ-8)



இராணுவத்தின் புதிய தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஜகத் குணவர்த்தன நியமிக்கப்பட்டார்.

இலங்கை இராணுவத்தின் 55 ஆவது தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஜகத்குணவர்த்தன நேற்று முன்தினம் தனது பதவியினை இராணுவத் தலைமையகத்தில் பொறுப்பேற்றார். (ஜ-8)

# சம்பிக்கவின் சர்ச்சைக்குரிய வாகன விபத்து உதவிப் பொலிஸ் அத்தியட்சகரை கைது செய்க!

## சட்டமா அதிபர் ஆலோசனை

(கொழும்பு)

வாகன விபத்தொன்றினையடுத்து, தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி சாரதியை மாற்றி, உண்மையை மறைத்து சாட்சியங்களைச் சோடித்து நீதித்துறைக்கு மோசடி செய்தமை தொடர்பிலான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க விவகாரத்தில், முன்னாள் வெலிக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் உதவி பொலிஸ் அத்தியட்சகருமான சுதத் அஸ்மடலவைக் கைதுசெய்ய சட்டமா அதிபர் ஆலோசனை வழங்கினார்.

குறித்த விவகாரம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு அவர் இந்த ஆலோசனைகளை வழங்கியுள்ளார். உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுதத் அஸ்மடலவுக்கு எதிராக பிடியாணை ஒன்றினைப் பெற்றுக்கொண்டு அவரைக் கைது செய்யுமாறு சட்டமா அதிபரின் ஆலோசனையில் கூறப்பட்டுள்ளது.

2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி சந்தீப் சம்பத் என்ற இளைஞரை விபத்துக்குள்ளாக்கியமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க, அவரது சாரதி உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டு தற்போது பிணையில் உள்ளனர்.

குறித்த விபத்து இடம்பெற்ற பின்னரான அன்றைய தினம் இரவு 11.13 மணிக்கு சம்பிக்க ரணவக்கவின் 076 711 5099 எனும் தொலைபேயில் இருந்து அப்போதைய மேல் மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபராக இருந்த, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் 071 859 1002 எனும் தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பொன்று எடுக்கப்பட்டுள்ளமை தொலைபேசி விபரத் தகவல்கள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் அந்த அறிக்கையைக் காட்டி, பூஜித ஜயசுந்தரவிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த வழக்கு விசாரணைகளைத் தொடர்வதற்கு கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு விசேட அனுமதியைப் பெற்றிருந்தது. அந்த அனுமதியின் பிரகாரம் முன்னெடுத்த விசாரணைகளில் சம்பிக்க - பூஜித உரையாடல் விவகாரம் வெளிப் படுத்தப்பட்டுள்ளது.

அதன் பின்னர் பூஜித ஜயசுந்தர வெலிக்கடை பொலிஸ் நிலைய அதிகாரிகளைத் தொடர்புகொண்டாரா? என்பது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட்டதன் பின்னணியிலேயே வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களுக்கு அமைய அப்போதைய வெலிக்கடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் உதவி பொலிஸ் அத்தியட்சகருமான சுதத் அஸ்மடலவைக் கைது செய்ய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. (ஜ-4)

# வெதுப்பக நடவடிக்கைகளில் வீழ்ச்சி

(கொழும்பு)

கொரோனாத் தொற்றின் காரணமாக தொழில் நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்துள்ளதாக வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்தது.

கொரோனாத் தொற்றின் காரணமாக ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டதால் வியாபார நடவடிக்கைகள் குறைவாகவுள்ளதாகவும் இருப்பிடங்களுக்கு திரும்பிய ஊழியர்களை மீண்டும் அழைப்பதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார். (ஜ-8)


## முதியோர் பராமரிப்பு

வெகு விரைவில் யாழ். நகர எல்லைக்குள் ஆரம்பிக்கவிருக்கும் முதியோர் இல்லத்திற்கு சேர விரும்புபவர்கள் முற்பதிவு செய்து கொள்ளலாம். (2941)

தொடர்பு:- 0779789210

## மணமகன்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977 ஆம் ஆண்டு பிறந்த அச்சுவினி நட்சத்திரம், மேட இராசி, கிரகபாவம் 31 1/2 மணமகளுக்கும், 1979 ஆம் ஆண்டு பிறந்த திருவாதிரை நட்சத்திரம் மிதுன இராசி சூரி, செவ்வாய் உள்ள கிரக பாவம் 30 1/2 மணமகளுக்கும் மணமகன்கள் தேவை.

தொடர்புக்கு: 0772630903 (2932)

## மணமகன் தேவை

1995.12.27
கத்தோலிக்கம்(R.C)
சதயம் 1 ம் பாதம்
A/L அழகுக்கலை பயிற்சி பெற்றவர்
எதிர்பார்ப்பு- வெளிநாடு மட்டும். (2927)

Tel-0775259541

## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம் 4
கி.பா: செவ் 8 இல் உயரம்: 5'
தகைமை/தொழில்: க.பொ.த.உ/த. Electronic Technician
எதிர்பார்ப்பு: படித்த உயரமான பெண்
தொ.இ: B/7066

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மகம் 4
கி.பா: 48 செவ் 10 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Diploma in IT. Pay Roll Manager
எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்
தொ.இ: B/7072

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 21 ¾ செவ் 10 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி வங்கி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: உத்தியோகம் பார்க்கும் பெண்
தொ.இ: B/7081

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி 2
கி.பா: 65 செவ் 1 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: Accounting & Finance (UK). Accountant (UK)
எதிர்பார்ப்பு: பட்டதாரிப் பெண்
தொ.இ: B/7093

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 2
கி.பா: 39 செவ் 1 இல்
உயரம்: 162cm
தகைமை/தொழில்: B.Sc
எதிர்பார்ப்பு: படித்த பொருத்தமான மணமகன்
தொ.இ: G/7755

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 1
கி.பா: - செவ் 1 இல் உயரம்: 5'
தகைமை/தொழில்: க.பொ.த.சா/த. தனியார் கல்வி நிலைய ஆசிரியர்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7758

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: ரோகினி 2
கி.பா: 19 செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Doctor
எதிர்பார்ப்பு: Engineer, Accountant, Lecturer.
தொ.இ: G/7788

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: சூரிசெவ் 2 இல்
தகைமை/தொழில்: விவசாய டிப்ளோமா
எதிர்பார்ப்பு: அரச தொழில்
தொ.இ: G/7790

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# தீவகக் கல்வி வலயத்தின் க.பொ.த.(சா/த) 2019 பரீட்சைப் பெறுபேறுகள் ஒரு பார்வை


பேராசிரியர்
பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்.

தீவகக் கல்வி வலயத்தில் 1991 ஆம் ஆண்டு பாரிய இடப்பெயர்வுக்கு முன்னர் 76 பாடசாலைகள் இருந்தன. ஆனால் இன்று 64 பாடசாலைகள் குறைவான மாணவர்களுடன் செயற்பட்டு வருகின்றன.

மீள்குடியேற்றம் மிகக் குறைவாகவும், மந்த கதியிலும் இடம் பெற்றுக் கொண்டிருப்பதால் தீவக பாடசாலைகளில் மாணவர்கள் எண்ணிக்கையும் இன்னும் சில வருடங்களுக்கு குறைவாகவே இருக்கும். மேலும் பிறப்பு விகிதம் குறைவடைந்து வருவதாலும் ஒரு சில பாடசாலைகளை மூடும் நிலையும் ஏற்பட இடமுண்டு.

தீவகக் கல்வி வலயத்தில் நான்கு கல்விக் கோட்டங்கள் இருக்கின்றன.கல்விக் கோட்ட அடிப்படையில் பாடசாலைகளின் எண்ணிக்கை பின்வருமாறு:- ஊர்காவற்றுறை-17, வேலணை-26, காரைநகர்- 13,நெடுந்தீவு-08, இக் கல்வி வலயத்திற்குள் 3 1AB பாடசாலைகளும் 8 1C பாடசாலைகளும் 21 II ஆம் வகைப் பாடசாலைகளும் இருக்கின்றன. 2019 ஆம் ஆண்டு க.பொ.த (சா/த) பரீட்சைக்கு இவ் வலயத்தில் 30 பாடசாலையிலிருந்து 577 மாணவர்கள் தோற்றியிருந்தனர்.

க.பொ.த.(சா/த) 2019 பரீட்சைக்கு முதன் முறையாகத் தோற்றிய பாடசாலை மாணவர்களை க.பொ.த. (உ/த) கற்க 306 பேர் தகுதி பெற்றுள்ளனர்.இந்த எண்ணிக்கை இவ்வலயத்தில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியோரில் 53.03 வீதமாகும். இப் பரீட்சை அடிப்படையில் க.பொ.த.(உ/த) கற்கத் தகுதி பெற்றோரின் வட மாகாண வீதம் 67.74 ஆக வும் தேசிய வீதம் 73.94 ஆகவும் உள்ளன.

நாட்டில் உள்ள 99 கல்வி வலயங்களில் தீவகக் கல்வி வலயமே பகுதி நிலையில் 99 ஆவது இடத்தைப் பெற்றிருப்பது பெரும் கவலைக்குரிய விடயமாகும்.

தாய்மொழி,கணிதம் உட் பட 6 பாடங்களில் சித்தி பெற்றும் இவற்றுள் 3 பாடங்களில் C சித்தி பெற்றவர்களின் எண்ணிக்கை 263 ஆகவும் சித்தி வீதம் 45.58 வீதமாகவும் இருக்கின்றது.

தேசிய நிலையில் திருகோணமலை வடக்குக் கல்வி வலயம் 99 ஆவது இடத்தில் இருக்கின்றது. வடக்கு மாகாணத்தில் சித்திவீதம் 60.80 ஆகவும் தேசிய சித்தி வீதம் 65.85 ஆகவும் இருக்கின்றன.

க.பொ.த (உ/த) கற்கத் தகுதி பெறுவோர் உயர்வாக இருப்பினும் இந்த வகை நிபந்தனைகளை அரச தொழில்களுக்கு விண்ணப்பிக்கக் கூடிய தகைமைகளாக கொண்டவையாகும்.

இவ் வலயத்தில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுள் 27 பேர் சகல பாடங்களிலும் சித்தியடையவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

அட்டவணை I இல் தீவக கல்வி வலயத்தினதும் தேசிய ரீதியினதும் க.பொ.த (சா/த) 2019 பரீட்சையில் பாட ரீதியான சித்தி விகிதங்கள் (ABCS) கூட்டாகக் காட்டப்பட்டுள்ளன.

| பாடம் | தீவக வலயம் | வடக்கு மாகாணம் | தேசிய மட்டம் |
|---|---|---|---|
| சைவநெறி | 77.10 | 85.49 | 86.03 |
| றோ.கத். | 83.13 | 92.61 | 93.56 |
| கிறிஸ்தவம் | 69.23 | 78.57 | 86.28 |
| இஸ்லாம் | 76.93 | 82.64 | 84.09 |
| தமிழ்மொழி | 75.91 | 87.05 | 88.43 |
| ஆங்கிலம் | 21.66 | 46.01 | 62.36 |
| கணிதம் | 53.30 | 67.55 | 71.08 |
| வரலாறு | 58.78 | 74.19 | 83.51 |
| விஞ்ஞானம் | 33.51 | 51.89 | 65.45 |
| வர்த்தகமும் கணக்கியலும் | 92.31 | 90.17 | 92.01 |
| புவியியல் | 77.12 | 83.26 | 89.03 |
| குடி. கல்வி | 60.34 | 67.04 | 79.89 |
| முயற்சியாண்மை | 86.67 | 84.74 | 84.08 |
| சங்கீதம் (கர்) | 95.92 | 94.77 | 95.04 |
| சித்திரம் | 85.56 | 86.82 | 87.69 |
| நாட்டியம் (பர) | 96.15 | 95.50 | 95.70 |
| தமிழ்.இல. | 100 | 91.83 | 86.35 |
| நாட.அரங். | 95.0 | 96.63 | 97.48 |
| தக.தொடர்பாடல் | 87.78 | 95.67 | 95.79 |
| விவசாயமும் உண.தொழி.நுட் | 61.29 | 75.15 | 82.32 |
| மீன்பிடியும் உண.தொழி.நுட் | 90.00 | 85.33 | 89.97 |
| ம.பொருளியல் | 66.67 | 74.53 | 82.67 |
| சுகா.உடற். | 70.53 | 87.20 | 92.87 |
| தொடர்.ஊடகக். | 33.33 | 85.71 | 83.53 |

மூலம்: வடமாகாணக் கல்வி அமைச்சு

வலய மட்டத்தில் 6 பாடங்களின் பெறுபேறுகள் குறைவாக இருக்கின்றன. சமயம், தாய்மொழி ஆகிய இரு பாடங்களைத் தவிர ஏனைய நான்கு பாடங்களிலும் S சித்திக்கு மேல் பெற்றவர்களின் வீதம் குறைவாகும். குறிப்பாக ஆங்கிலம், விஞ்ஞானப் பாடங்களில் S சித்திக்கு மேல் பெற்றவர்களின் வீதங்கள் மிகக் குறைவாகும்.

சமயம் தவிர்ந்த ஐந்து பிரதான பாடங்களின் அடைவு மட்டங்களை நோக்கின் A,B தரச் சித்தி பெற்றவர்கள் மிகக் குறைவாக இருப்பதைக் காணலாம். அட்டவணை II இல் பிரதான 5 பாடங்களின் அடைவு நிலைகள் வீதத்தில் பின்வரு மாறு,

| பாடம் | A% | B% | C% | S% | W |
|---|---|---|---|---|---|
| தமிழ்மொழி | 3.64 | 10.23 | 32.58 | 29.46 | 24.09 |
| ஆங்கிலம் | – | 1.73 | 4.51 | 15.42 | 78.34 |
| கணிதம் | 7.47 | 5.56 | 19.27 | 21.01 | 46.69 |
| வரலாறு | 7.13 | 4.87 | 19.83 | 26.96 | 41.21 |
| விஞ்ஞானம் | 1.39 | 2.43 | 9.90 | 19.79 | 64.49 |

மூலம்: வடமாகாணக் கல்வி அமைச்சு

பிரதான பாடங்களில் A,B,Cதரங்களைப் பெற்றவர்களின் விகிதாசாரங்களைச் சேர்த்துப் பார்க்கும் பொழுது தமிழ் (46. 45%), ஆங்கிலம் (6.24%), கணிதம் (32. 3%), வரலாறு (31.83%), விஞ்ஞானம் (13. 72%) ஆக இருக்கின்றன. விஞ்ஞானப் பெறுபேறு மிகவும் குறைவாக இருப்பதால் க.பொ.த. (உ/த) விஞ்ஞானப் பிரிவுக்குத் தகுதி பெற்றோர் மிகமிகக் குறைவாகவுள்ளனர்.

சமய பாடங்களில் C தரத்திற்கு மேல் பெற்றோர் வீதம் பின்வருமாறு, சைவநெறி- 59.76%, கத்தோலிக்கம்- 67. 86%, கிறிஸ்தவம்- 23.08%, இஸ்லாம்- 33.33%. சைவ நெறி, கத்தோலிக்கம் ஆகிய இரண்டு பாடங்களில் அடைவு உயர்வாக இருப்பினும் ஒப்பீட்டு ரீதியில் அது குறைவாக இருப்பதையே அடைவு நிலைகளைக் காட்டுகின்றன.

விருப்புப் பாடங்கள்- தொகுதி-I C இற்கு மேற்பட்ட சித்தி வீதங்கள் பின்வருமாறு, வியாபாரமும் கணக்கியலும்-69.43%, புவியியல்-46.6%, குடியுரிமைக்கல்வி-35.77%, முயற்சியா ண்மை- 66.67%.

தொகுதி-II சங்கீதம் (கர் நாடகம்)-68.98%, சித்திரம்-35.33%, பரத நாட்டியம்- 67. 85%, தமிழ் இலக்கியம், நாடகமும் அரங்கியலும்- 78.33%

தொகுதி-III தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும்- 68.9%, விவசாயமும் உணவுத் தொழில்நுட்பமும்- 35.49%, மீன்பிடியும் உணவுத் தொழில்நுட்பமும்-50%, மனைப் பொருளியல்- 53. 33%, சுகாதாரமும் உடற்கல்வியும்- 44.21%, தகவலும் ஊடகக் கல்வியும்-00.%.

தொகுதி-I இல் நான்கு விருப்புப் பாடங்களிலும் தொகுதி- II இல் ஐந்து விருப்புப் பாடங்களிலும் தொகுதி-III இல் ஆறு விருப்புப் பாடங்களிலும் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர்.

இவற்றுள் தமிழ் இல க்கியத்தில் 100% Cஇற்கு மேற்பட்ட பெறுபேறுகளைப் பெற்றிருப்பது பாராட்டத்தக்கது.

அதே நேரத்தில் ஊடகக் கல்வியில் யாரும் C இற்கு மேற்பட்ட பெறுபேறுகளைப் பெறவில்லை.

பரீட்சைப் பெறுபேறுகளை ஆராயும் பொழுது க.பொ.த (உ/த) கற்கத் தகுதி பெற்ற 300 மாணவர்களில் அதிகமானவர்கள் கலைப் பிரிவில் கற்பதற்கே தகுதி பெற்றுள்ளார்கள்.

விஞ்ஞானப் பிரிவுக்குச் சிறு தொகையினர் தகுதி பெற்ற பொழுதும் உயர் பெறுபேறுகளுடன் தகுதி பெறாமையால் இவர்கள் விஞ்ஞானப் பிரிவில் சேர்வது குறித்து தளம்பல் நிலை காணப்படுவதைக் காணமுடிகின்றது.


மேலும் தீவகத்தில் எந்தவொரு பாடசாலையிலும் க.பொ.த. உயர்தர உயிரியல் விஞ்ஞானப் பிரிவு இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாடசாலை ரீதியாக க.பொ.த (சா/த) 2019 பரீட்சைப் பெறு பேறுகள் C கணிதம், முதல் மொழி உட்பட 3C,3S பெற்றவர்கள்.

(திங்கள் தொடரும்)




# புலவர் தந்த புது உலகம்



அது மன்னராட்சி நடைபெற்ற காலகட்டம். தம்மிடம் பாட வரும் புலவர்களுக்கு மன்னர்கள் பரிசு கொடுப்பது வழக்கம். அப்படி ஒரு நாள் இந்தப் புலவர் அரசவைக்கு வந்தார். ஆனால், அவர் பாட்டுப் பாடிப் பரிசு பெற வரவில்லை.

தன்னிடம் உள்ள அரிய வகை உயிரினங்களைக் காட்டி, பரிசு பெற்றுச் செல்ல வந்தார். இதை அறிந்த மன்னர் ஆச்சரியப்பட்டார். அந்த உயிரினங்களைக் காட்டுவதற்கு அனுமதி கொடுத்தார்.

புலவர் மகிழ்ச்சியாகத் தன்னிடம் இருந்த உயிரினங்களை எல்லாம் கொண்டுவந்து காட்டினார். என்றைக்கும் இல்லாமல் அன்றைக்கு விலங்குகளும் பறவைகளும் சத்தமிடுகிற ஒலிகள் வானைப் பிளந்தன. அரண்மனை அல்லோலகல்லோலப்பட்டது. மன்னர் அரண்மனையை விட்டு வெளியில் வந்து பார்வையிட்டார்.

குவா ஹா ஹா என்று சத்தமிட்ட குதிரை போன்ற ஒரு விலங்கு அவர் கண்ணில் பட்டது. அடர் பழுப்பு, வெள்ளைக் கோடுகள் அந்த விலங்கின் முன் பகுதியில் இருந்தன. பின் பகுதியில் கோடுகள் இல்லை. அது மன்னரைக் கண்டதும் இரண்டு முறை சத்தமிட்டது. இது என்ன விலங்கு என்று கேட்டார் மன்னர். இதுதான் ஒகாபி என்றார் புலவர்.

அடுத்து மன்னரின் கண்ணில்பட்டது ஒரு பறவை. சாதாரண பறவையைப்போல் அல்லாமல் மிகப் பெரிய உருவம் கொண்ட அந்தப் பறவையால் பறக்க முடியவில்லை.

சிறகுகள் பழுப்பாகவும் சாம்பல் நிறமாகவும் இருந்தன. அதன் கால்கள் மஞ்சள் நிறத்தில் இருந்தன. அலகோ பச்சை நிறத்தில் இருந்தது.

மன்னரைக் கண்டதும் தத்தித்தத்தி அருகில் வந்தது. ஏதோ கேட்பதுபோல அலகைத் திறந்து தலையசைத்தது. மன்னருக்கு ஒரே மகிழ்ச்சி. அருகில் இருந்த புலவர் இதுதான் டோடோ என்றார்.

மன்னரின் ஆர்வம் அதிகமானது. குட்டிகளுடன் இருந்த ஒரு விலங்கைக் கண்டார். "மன்னா, இது ஓநாய்" என்று புலவர் சொன்னதும், அது பல்லைக் காட்டிச் சற்று பயமுறுத்தியது. மன்னர் சற்றே பின்னால் சென்றார். ஆனாலும் ஓநாய் சற்றே முன்னேறி வந்து, அவரது கால்களை நக்கியது.

"இது சாதுவானதா?" என்று பயத்துடன் கேட்டார் மன்னர்.

"சாது என்று சொல்ல முடியாது மன்னா. ஓநாய்களிடம் நெருங்காமல் இருப்பதே நல்லது" என்றார் புலவர்.

பார்த்துக்கொண்டே வரும்போது மூலையில் படுத்துக் கிடந்த விலங்கு ஒன்றைக் கண்டார் மன்னர். அருகில் சென்று பார்த்தார். பூனை மாதிரியும் புலி மாதிரியும் இருந்தது அது. இது ஏன் இப்படிப் படுத்துக் கிடக்கிறது என்று கேட்டார்.

"அதுக்குப் பசிக்கிறது மன்னா" என்றார் புலவர்.

உடனே உணவு கொடுக்கச் சொல்லி உத்தரவிட்டார் மன்னர். அது சாப்பிடும் அழகைப் பார்த்து, இது என்ன விலங்கு என்று விசாரித்தார். ஒரு காலத்தில் பெருகித்திரிந்த சிவிங்கிப்புலி இதுதான் என்றார் புலவர்.

"என் வாழ்நாளில் இந்த உயிரினங்களை எல்லாம் பார்த்ததே இல்லை! இவற்றை நான் வாங்கிக் கொள்கிறேன். இந்த உயிரினங்கள் உங்களுக்கு எப்படிக் கிடைத்தன?" என்று கேட்டார் மன்னர்.

"இவை எல்லாம் என் முன்னோர்களால் வளர்க்கப்பட்டவை. இவற்றை அழிவிலிருந்து அவர்கள் காப்பாற்றினர். இப்போது பூமியில் அழிந்துவிட்டதாகச் சொல்லப்படும் அரிய வகை உயிரினங்கள் இவை.

என் அப்பா இவற்றை என்னிடம் ஒப்படைத்தார். பத்திரமாகப் பாதுகாக்க வேண்டும் என்று உறுதிமொழியும் வாங்கிக்கொண்டார்" என்றார் புலவர்.

இதைக் கேட்டதும் மன்னர், விலை கொடுத்து வாங்கும் முடிவைக் கைவிட்டார். அரிய உயிரினங்களைக் காப்பாற்றும் புலவர் குடும்பத்துக்கு உதவி செய்ய விரும்பினார். அமைச்சர்களுடன் ஆலோசித்து ஒரு முடிவு எடுத்தார்.

அந்த உயிரினங்கள் வாழ்வதற்காக ஒரு காட்டைத் தானமாக வழங்கினார். மேலும், அங்கு புலவரின் குடும்பத்தினர் தவிர, வேறு யாரும் செல்லக் கூடாது, அங்குள்ள மரங்களை வெட்டக்கூடாது, உயிரினங்களை வேட்டையாடக் கூடாது என்று உத்தரவிட்டார். அத்துடன் புலவருக்குப் பொற்காசுகளையும் வழங்கினார்.

அப்போது மன்னரைத் தேடி ஒரு பாட்டி வந்தார். தான் வளர்க்க ஓர் ஓநாயைக் கேட்டார்.

"ஐயோ! அது பொல்லாதது ம்மா. வீட்டில் வைத்து வளர்க்க முடியாது" என்றார் மன்னர்.

"எனக்கு யாரும் இல்லை. இதை அன்பாகப் பழக்கிக்கொள்கிறேன். உணவு கொடுத்து அன்பு காட்டினால் அது எனக்குத் துணையாகவும் காவலாகவும் இருக்கும் என்று நம்புகிறேன்" என்றார் பாட்டி.

மன்னருக்கு ஒருபக்கம் வியப்பு. மறுபக்கம் அச்சம். அந்தப் பாட்டியின் நம்பிக்கையை மதிக்க வேண்டும் என்று நினைத்தார். மேலும் பெண்களால் எதையும் அன்பானதாக மாற்றி விட முடியும் என்றும் நம்பினார்.

பாட்டிக்கு ஓர் ஓநாயைத் தர முடியுமா? என்று புலவரிடம் கேட்டார். அவரும் ஒப்புக்கொண்டார். ஓநாய்க் குட்டியைப் பாட்டிக்குத் தந்தார் புலவர்.

பாட்டி அன்று வளர்த்த அந்த ஓநாய்தான், இன்று வரை நம் வீட்டு நண்பனாகவும் காவலனாகவும் இருந்து வருகிறது. இன்று இதன் பெயர் நாய்.

மன்னரின் உதவியால் விலங்குகளுக்குப் பாதுகாப்பான இடமும் கிடைத்தது, உணவும் கிடைத்தது.

அரிய உயிரினங்கள் பெருகின. புலவரது குடும்பமும் பெருகியது. தலைமுறை தலைமுறையாகப் புலவரது குடும்பத்தினர் அரிய உயிரினங்களைப் பாதுகாத்து வருகின்றனர்.

இப்போது அந்த மன்னர் யார் என்றே தெரியவில்லை. அந்தப் புலவர் பெயரும் தெரியவில்லை. ஆனால், அந்தப் புலவரின் வம்சாவளியினர் இன்றும் எங்கோ ஓரிடத்தில் அந்த அரிய உயிரினங்களை வளர்த்து வருகின்றனர்.

எவ்வளவு முயன்றும் அவர்களைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை. உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுங்களேன்.

# உணவகமொன்றின் மீது துப்பாக்கிச்சூடு
## மற்றுமொரு நபர் கைது

(கொழும்பு)

இரத்மலானை பகுதியில் உணவகம் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப்பிரயோகம் தொடர்பில் மற்றுமொருவர் நேற்று கைது செய்யப்பட்டார்.

அக்குரஸ்ஸ பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின்போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்தது.

இரத்மலானை பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றின் மீது கடந்த 19 ஆம் திகதி தாக்குதல் மேற்கொண்ட ஒருவரை காயப்படுத்தியமை மற்றும் அதே வர்த்தக நிலையத்தில் கடந்த 28 ஆம் திகதி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுதப்பிச் செல்வதற்கு உதவி புரிந்தமை தொடர்பிலான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு தெஹிவளை, கல்கிஸை நகர சபை உறுப்பினர் ரஞ்சித் டி. சில்வா மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு கொலை செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்டு பிணையில் வெளிவந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# தனியார்துறை பணியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்
## 15 ஆயிரம் முறைப்பாடுகள்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக கடந்த 2 மாதங்களில் தனியார் துறையில் பணியாற்றுபவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் 15 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பான பூரண அறிக்கை ஒன்றை தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைத்துள்ளதாக தொழில் திணைக்களத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பணியாளர்களை பணியிலிருந்து நிறுத்தியமை, மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படாமை, மாதாந்தக் கொடுப்பனவில் ஒரு பகுதி மட்டும் வழங்கப்பட்டமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

குறித்த விடயம் தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள நிறுவனங்களின் தலைவர்களை வரவழைத்து, நேரடியாகக் கலந்துரையாடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கலந்துரையாடலின் பின்னர் முறைப்பாடுகளுக்கு வழங்கக் கூடிய தீர்வுகள் தொடர்பில் தீர்மானிக்கப்படும் என தொழில் திணைக்களத்தின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இதுவரை 711 பேர் வாக்குமூலம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் இதுவரை 711 பேர் ஜனாதிபதி ஆணைக்குழுவில் வாக்குமூலம் வழங்கினர்.

146 பேரிடம் சாட்சியங்கள் பதிவு செய்யப்பட்டதாக ஆணைக்குழுவின் செயலாளர் எச்.எம். பீ.பி.ஹேரத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாட்சிப் பதிவிற்காக நேற்று முன்தினம் 3 பேர் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டனர். இந்தப் பயங்கரவாதத் தாக்குதலின்போது தெமட்டகொட மாஃக் குடியிருப்பில் பணியாற்றிய பெண் காவலாளி, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் உதவி பொலிஸ் இன்ஸ்பெக்டர் மற்றும் வத்தளை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவரும் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டனர். பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவில் கடமையாற்றிய தலைமை உத்தியோகத்தர் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சி வழங்கியிருந்தார் என மேலும் தெரிவித்தார்.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பதவிக்காலம் எதிர்வரும்செப்டெம்பர்மாதம்20 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஜ-8)

# மின்சார வேலியில் சிக்கி விவசாயி பரிதாபமாகப் பலி

(வெல்லாவெளி)

மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தில் யானைக்கு அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியின் மின்சாரம் தாக்கி விவசாயி ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார். குறித்த சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது. வெல்லாவெளி பொலிஸ் பிரிவின் கீழுள்ள 39 ஆம் கொலனியில் உள்ள வயல் பிரதேசத்தில் வேளாண்மையை யானைகளிடம் இருந்து பாதுகாக்க சில விவசாயிகள் ஒன்றிணைந்து வயல் பகுதியில் பாதுகாப்பற்ற முறையில் மின்சாரம் பெற்று. மின்சார வேலி அமைத்திருந்தனர். இந்த மின்சார வேலிப் பகுதியில் குறித்த விவசாயியின் மாட்டுப்பட்டி மற்றும் விவசாயம் அமைந்திருந்த நிலையில் சம்பவதினமான நேற்று அதிகாலை 2 மணியளவில் வீட்டில் இருந்து மாட்டுப்பட்டிக்கு சென்றிருந்த நிலையில் அங்கு அமைந்திருந்த மின்சார வேலியின் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். (ஜ-4-8)

# யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் இடர்கால நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

கொரோனா இடர்கால உதவித் திட்டம் வழங்கும் முகமாக யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் நிதியுதவியுடன் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ்.கே.எழில்வேந்தனின் வழிகாட்டலில் குறித்த கல்லூரி மாணவர்களின் 286 குடும்பங்களுக்கு தலா 5000 ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ஜ-2-5)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

தாவடி ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலையின் ஒத்துழைப்புடன் இரத்ததான முகாம் எதிர்வரும் 6 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை ஸ்ரீ அம்பலவாண வேத விநாயகர் ஆலய அன்னதான மண்டபத்தில் நடைபெற வுள்ளது. (2-5)

# வாளுடன் இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறைப் பகுதியில் வாளைக் காட்டி மக்களை பயமுறுத்திய இளைஞன் ஒருவரை இராணுவத்தினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். நேற்று முன்தினம் திங்கட்கிழமை குறித்த இளைஞன் வாளுடன் பொதுமக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்துள்ளார். இதை அவதானித்த சிலர் இராணுவத்தினருக்கு தகவல் வழங்கியதையடுத்து இராணுவத்தினர் குறித்த நபரை வாளுடன் கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(2-5-9)

# அர்ஜூன் மகேந்திரன் விவகாரம்; 3 நாட்களில் 21 ஆயிரம் கையெழுத்திட்டேன்

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரி விளக்கம்



(கொழும்பு)

**மூன்று நாட்களின் பின்னர் எனது கை விரலில் பேனாவின் தழும்பு பதியும் அளவுக்கு நான் 21 ஆயிரம் கையெழுத்துக்களையிட நேரிட்டதென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.**

பொலநறுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு வரவழைப்பதற்காக சட்டமா அதிபரால் தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் அரசாங்கத்தின் தலைவன் என்ற ரீதியில் மூன்று நாட்களில் 21 ஆயிரம் கையெழுத்துக்களையிட நேரிட்டது.

மகேந்திரனை, மத்திய வங்கியின் ஆளுநராக நியமிப்பதற்குத் தான் எதிர்ப்பு தெரிவித்திருந்ததாகவும் அரசாங்கத்தை அமைத்து இரண்டு வாரங்களே ஆகியிருந்த நிலைமையில், ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் விரிசலைக் கொண்டு வந்துவிடும் என்ற காரணத்தால், பிரதமரின் சிபாரிசுக்கு தலை சாய்த்தேன். இதில் எனது விருப்பு இன்றியே இந்நியமனம் வழங்கப்பட்டது.

2019 இல் சிங்கப்பூரில் நடந்த மாநாடொன்றுக்குத் தான் சென்றிருந்த போது, அந்நாட்டுப் பிரதமரைத் தனிப்பட்ட ரீதியில் சந்தித்து, அர்ஜுன் மகேந்திரனை எம்மிடம் ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுத்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# நவீன பொது வசதிகள் மையம் கிளிநொச்சியில் திறப்பு




(முறிகண்டி)

கிளிநொச்சி நகரில் 12.2 மில்லியன் செலவில் நவீன பொது வசதிகள் மையம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. உலக வங்கியின் நிதி உதவியுடன் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் குறித்த பொது வசதிகள் மையம் நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல், வீடமைப்பு வசதிகள் அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டு கரைச்சிப் பிரதேச சபையிடம் கையளிக்கப்பட்டது.

ஆண்கள், பெண்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் பொது மலசலகூடம், பாலூட்டும் அறை, குளியலறை உள்ளடங்கலாக குறித்த பொது வசதிகள் மையம் அமைக்கப்பட்டுள்ளது.

கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அருணாசலம் வேழமாலிகிதன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளர் என்.யு.கே. ரணதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர். (2-5-100)

# குளத்துக் காணியை ஆக்கிரமித்தோருக்கு எதிராக வழக்குத் தாக்கல்



(குருமன்காடு)

வவுனியாவில் குளத்துக் காணிகளை அபகரித்து அமைக்கப்பட்ட நிரந்தர மற்றும் தற்காலிக வேலிகளை அகற்றும் நடவடிக்கையில் மாவட்ட கமநல அபிவிருத்தித்திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

அந்த வகையில் நேற்றுக் காலை முதல் நான்கு குளங்களின் நிலப்பகுதிகளை ஆக்கிரமித்து நிரந்தர மற்றும் தற்காலிக வேலிகளை அகற்றும் நடவடிக்கையை கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தலைமையிலான உத்தியோகத்தர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து முன்னெடுத்தனர்.

இதன்போது, குளங்களைப் பாதுகாக்கும் நோக்கோடு பட்டக்காடு குளம், வேப்பங்குளம், கோவில்குளம், ஓயார் சின்னக்குளம் ஆகிய குளங்களின் காணிகளை அபகரித்து அமைக்கப்பட்ட வேலிகளே இவ்வாறு அகற்றப்பட்டன.

அத்துடன் குளத்துக் காணிகளை ஆக்கிரமித்து நிரந்தரக் கட்டடங்கள் அமைத்தவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்கள மாவட்ட உதவி ஆணையாளர் தெரிவித்தார். (2-5-250)

# சுதந்திரத்திற்குப் பின்

# இலங்கை பாராளுமன்றத் தேர்தல்கள்

08

கலாநிதி க.தவலிங்கம், தவிசாளர் -எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



| பாராளுமன்றத் தேர்தல் 1960 ஜூலை | | | | |
|---|---|---|---|---|
| | வேட்பாளர்கள் | | | |
| A-போட்டியிட்டோர்<br>B- தெரிவு செய்யப்பட்டோர்<br>C- போடப்பட்டமொத்த வாக்குகள் | A | B | C | % |
| ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி | 98 | 75 | 1,022,171 | 33.22% |
| ஐக்கிய தேசிய கட்சி | 128 | 30 | 1,144,166 | 37.19% |
| இலங்கைத் தமிழரசுக்கட்சி | 21 | 16 | 213,733 | 6.95% |
| லங்கா'சமசமாஜகட்சி | 21 | 12 | 224,995 | 7.31% |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 7 | 4 | 90,219 | 2.93% |
| மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி | 55 | 3 | 106,816 | 3.47% |
| லங்கா ஜனநாயகக் கட்சி | 6 | 2 | 30,207 | 0.98% |
| தேசிய விடுதலை முன்னணி | 2 | 2 | 14,030 | 0.46% |
| அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் | 10 | 1 | 46,804 | 1.52% |
| சுயேட்சை | 45 | 6 | 183,728 | 5.97% |
| மொத்தம் | 393 | 151 | 3,076,869 | |

### ஐந்தாவது பாராளுமன்றம் (பிரதிநிதிகள் சபை)

05 ஆகஸ்ட் 1960 - 17 டிசம்பர் 1964

| பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா | எதிர்கட்சித் தலைவர் டட்லி சேனநாயக்க | சபாநாயகர் R.S. பெல்பொல, | சபாநாயகர் ஹியு பர்னாந்து |
|---|---|---|---|









1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் கீழ் நடத்தப்பட்ட ஒரேயொரு பொதுத் தேர்தல் இதுவே யாகும்.

**இலங்கை மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு -1982**

இலங்கை மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு, இலங்கை அரசியல் வரலாற்றில் முதல் தடவையாக டிசெம்பர் 22, 1982இல் நடைபெற்றது. ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெய வர்த்தன அப்போதைய பாராளுமன்றத்தின் பதவிக் காலத்தை மேலும் ஆறாண்டுகளுக்கு நீடிப்பதற்கா கவே மக்களின் விருப்பத்தைக்கோரி இந்த வாக்கெ டுப்பினை நடத்தினார்.

அரசறிவியலில் பயன்படுத்தப்படும் அடிப்படை எண்ணக்கருக்களுள் ஒன்றாக விளங்கும் மக்கள் தீர்ப்பு என்பது ஜனநாயகத்தின் ஓர் அங்கமாகக் கருதப் படுகின்றது. மக்கள் தீர்ப்பு **(referendum)** ஒப்பாங் கோடல் எனும்போது அரசியலமைப்பு ஏற்பாடுகள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளின் போது பொது மக்களின் விருப்பு வெறுப்புக்களை மக்கள் மூலமாகவே அறிந்துகொள்ளும் வழிமுறை என பொருள் கொள்ளப்படுகிறது.

ஜனாதிபதியால் மக்கள் தீர்ப்புக்கான அறிவிப்பு விடுக்கப்பட்ட பின் மக்கள் தீர்ப்பு தேர்தலை நடத்தும் பொறுப்பு தேர்தல் ஆணையாளரைச் சார்ந்தது. 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பு சட்டவிதிகள், 1981ஆம் ஆண்டு 7ஆம் இலக்க பாராளுமன்ற சட்ட மூலம் என்ப வற்றுக்கு இணங்க இத்தேர்தல் நடத்தப்படுதல் வேண்டும்.

1981ஆம் ஆண்டு 7ஆம் இலக்க பாராளுமன்ற சட்ட மூலத்துக்கிணங்க மக்கள் தீர்ப்புக்காக விடப்படும் பிரேரணை வினா வடிவில் முன்வைக்கப்படுதல் வேண்டும். அவ்வாறாயின் வாக்காளர் அப்பிரேரணை க்கு விருப்பமாயின் "ஆம்" எனவும் விருப்பமில்லை யெனில் "இல்லை" எனவும் வாக்கினை வழங்குதல் வேண்டும். வாக்குச் சீட்டில் "ஆம்" "இல்லை" என்ற சொற்கள் மும் மொழியிலும் அச்சிடப்பட்டிருக்கும். "ஆம்" என்ற சொல் லுடன் "விளக்கு" அடையாளமும் "இல்லை" என்ற சொல்லுடன் "குடம்" என்ற அடையாளமும் அச்சிடப்பட்டி ருத்தல் அவசியமாகும்.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அப்போதைய பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தை மேலும் ஆறாண் டுகளுக்கு நீடிப்பதற்காகவே மக்களின் விருப்பத்தைக் கோரி இந்த வாக்கெடுப்பினை நடத்தினார். பாராளு மன்றத்தின் பதவிக்காலத்தை மேலும் ஆறாண்டுக ளுக்கு நீடிப்பதற்கான தேர்தல் முடிவுகள் பின்வருமாறு அமைந்திருந்தது.

ஆம் - (ஆதரவாக) விளக்கு சின்னம் - **3,141,223 (54.66%)**. இல்லை - (எதிராக) குடம் சின்னம் - **2,605,983 (45.34%)**. செல்லுபடியான வாக்குகள் - **5,747,206 (99.63%)**. நிராகரிக்கப்பட்ட வாக்குகள் - **21,456 (0.37%)**. அளிக்கப்பட்ட வாக்குகள் - **5,768,662,** அளிக்கப்பட்ட வாக்கு விகிதம் - **70.82%,** பதியப்பட்ட மொத்த வாக்குகள் - **8,145,015**. இதன்படி பாராளுமன்றத்தின் பதவிக்காலம் மேலும் ஆறாண்டுக ளுக்கு நீடிக்கப்பட்டது.

**இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1989**

இலங்கையின் 9ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1989 பெப்ரவரி 15 இல் நடைபெற்றது. விகிதாசார முறைப்படி நடந்த முதலாவது தேர்தல் ஆகும். இலங்கை பாராளுமன்றத்திற்காக் 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத்தேர்தல் நடத்தப்பட்டது. இதில் 196 பிரதிநிதி களை வாக்காளர்கள் நேரடியாக தேர்ந்தெடுப் பார்கள். 29 பிரதிநிதிகள் தேசியப்பட்டியல் மூலம் தேர்ந் தெடுக்கப்படுவார்கள். 1983 ஆம் ஆண்டில் நடத்தப்பட வேண்டிய இத் தேர்தல் 1982 தேசிய வாக்கெடுப்பு மூலம் இரத்துச் செய்யப்பட்டது. இத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இலங்கை தொழிலாளர் காங் கிரஸ் இணைந்து போட்டியிட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம் இணைந்து போட்டியிட் டன. ஐக்கிய சோசலிசக் கூட்டணி என்ற பெயரில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, நவ லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை மகாஜன கட்சி ஆகியவை சேர்ந்து போட்டியிட்டன.

9ஆவது பாராளுமன்றத் தேர்தல் இலங்கையில் ஜே.வி.பி. பிரச்சினை காலத்தில் நடைபெற்றது. இத் தேர்தல் பெப்ரவரி 15, 1989 அன்று நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி 225 இடங்களில் 125 இடங் களைப் பெற்று பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொண்டது. பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 67 இடங்களை வென்றது. தமிழ் குழுவான ஈழம் புரட்சிகர மாணவர் அமைப்பு (ஈரோஸ்) சுயாதீன குழுவாக போட்டியிட்டு 13 இடங் களை வென்றது, அதே நேரத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி **(TULF / ENDLF / EPRLF / TELO)** 10 இடங்களை வென்றது. மீதமுள்ள 10 இடங்களை சிறிய கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்கள் வென் றன.

புதிய பாராளுமன்றம் 1989 மார்ச் 9 அன்று பதவி யேற்றது. எம். எச். முகமது சபாநாயகராக்வும், காமினி பொன்சேகா துணை சபாநாயகராகவும், தேர்ந்தெடு க்கப்பட்டனர். மார்ச் 3, 1989 அன்று ஜனாதிபதி ரணசி ங்க பிரேமதாஸ டி. பி. விஜேதுங்காவை பிரதமராக நியமித்தார். 1993 ஆம் ஆண்டு மே முதலாம் திகதி ஜனாதிபதி பிரேமதாஸ படுகொலை செய்யப்பட்டார். ஜனாதிபதி பிரேமதாஸவுக்குப் பின் பாராளுமன்றம் ஜனாதிபதியாக பிரதமர் டி. பி. விஜேதுங்கவைத் தேர்ந் தெடுத்து 1993 மே 7 அன்று பதவியேற்றார். அதே நாளில் ஜனாதிபதி விஜேதுங்க ரணில் விக்கிரம சிங்கவை புதிய பிரதமராக நியமித்தார். பாராளு மன்றக் காலம் முடிவுறுவதற்கு பல மாதங்கள் முன்ன தாக ஜனாதிபதி விஜேதுங்க 24 ஜூன் 1994 அன்று பாராளுமன்றத்தை கலைத்தார்.

**இலங்கை பாராளுமன்றத் தேர்தல், 1994**

இலங்கையின் 10ஆவது பாராளுமன்றத் தேர்தல் 1994 ஒகஸ்ட் 16 இல் நடைபெற்றது. இலங்கை பாராளுமன்றத்திற்காக 225 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய இத்தேர்தல் நடத்தப்பட்டது. 17 ஆண்டு கால ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி முடிவுக்கு வந் தது. முன்னைய ஆட்சியாளர்களான ஜே. ஆர். ஜெய வர்த்தன, ஆர். பிரேமதாஸ ஆகியோரின் ஆட்சியில் இலங்கையின் மக்களாட்சி பெரிதும் வீழ்ச்சியைக் கண்டது. எதிர்க்கட்சிகள் தடை செய்யப்பட்டன. விடுத லைப் புலிகள், மக்கள் விடுதலை முன்னணி ஆகிய வற்றிற்கு எதிரான போர்களில் ஊடகங்களுக்கு தணிக்கை, படுகொலைகள், சித்திரவதை போன் றவை பெருமளவு இடம்பெற்றன. 1983 இல் நடைபெற விருந்த பாராளுமன்றத் தேர்தல்களை ஐக்கிய தேசியக் கட்சி நடத்தவில்லை.

உள்நாட்டுப் போரினாலும், அடக்குமுறை யினா லும் மக்கள் களைப்படைந்திருந்தனர். அமைதி, விடுதலை, மக்களாட்சியை மக்கள் விரும்பினர். ஸ்ரீல ங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சந்திரிகா குமார துங்க சில இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து மக்கள் கூட்டணியை அமைத்தார். இலங்கைத் தமிழருடன் இணக்கப்பாட்டுக்கு வர அக்கட்சி தீர்மானித்து தேர்தலில் போட்டியிட்டது. மக்கள் கூட்டணி அரசு அமைக்கத் தேவையான 113 இடங்களைக் கைப்பற்ற முடியவில்லை, ஆனாலும் சில சிறிய கட்சிகளுடன் இணைந்து ஆட்சியை அமைத்தது. திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டார். எதிர்க்கட்சித் தலைவராக காமினி திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டார். (தொடரும்)

# கந்தளாயில் கோர விபத்து; ஒருவர் பலி! மற்றொருவர் காயம்

(திருமலை)

திருகோணமலை கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கந்தளாய் சேருவில பகுதியில் கார் ஒன்று மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரில் ஒருவர் பலியானதோடு மற்றவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை 5.30 மணியளவில் இடம்பெற்றதாகவும் விபத்தில் கந்தளாய் பேராறு பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையொருவரே பலியானதோடு கந்தளாய் பேராறு பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய மற்றைய நபர் படுகாயங்களுடன் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



காரின் சாரதியை கைது செய்துள்ளதோடு சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-4)

# நம் நாட்டில் விளைகின்ற பயிரை இறக்குமதி செய்ய அனுமதி கிடையாது

## சமல் திட்டவட்டம்



(கொழும்பு)

**தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நாட்டில் பயிரிடக்கூடிய எந்தவொரு பயிரையும் இறக்குமதி செய்ய அரசு அனுமதிக்காதென விவசாயத்துறை அமைச்சர் சமல் ராஜபக்ஷ திட்டவட்டமாகத் தெரிவித்தார்**

அம்பலாந்தொட- தெலவில்ல பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உள்ளூர் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காகவே இத்தகையதொரு திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாகவும் நாட்டில் விவசாயத்தைச் சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கு விவசாயிகளுக்கு தேவையான உதவிகளை அரசாங்கம் செய்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4-8)

# கொரோனாவை கட்டுப்படுத்தும் பொறுப்பு நாட்டிலுள்ள அனைவருக்கும் உள்ளது

## சுகாதாரப் பணிப்பாளர் அனில் ஜாசிங்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

கொவிட்-19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் பொறுப்பு நாட்டிலுள்ள அனைவருக்கும் உள்ளது என்றும் வைரஸ் பரவலை கட்டுப்படுத்த பிறப்பிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் நாட்டில் வாழும் 22 மில்லியன் மக்களுக்கும் பொதுவானது என்றும் ஒரு குடும்பமோ அல்லது அதிகாரத்தில் உள்ள எவரும் அதனை மீறமுடியாது என்றும் சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

கொவிட்-19 வைரஸ்தொற்று நோய் பரவல் குறித்த அச்சுறுத்தல் நிலவுகின்ற நிலையில் சுகாதாரப் பணிப்பகத்தின் செயற்பாடுகள் குறித்து நேற்று முன்தினம் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிலைமைகள் கட்டுப்பாட்டில் உள்ளது என்பதை எம்மால் உறுதிப்படுத்த முடியும். இப்போது வரையில் தனிமைப்படுத்தல் முகாம்களில் உள்ள



வர்களிடம் மட்டுமே வைரஸ் தொற்று கண்டறியப்பட்டு வருகிறது.

அதற்கும் அப்பால் வெளிநாடுகளில் இருந்து வரவழைக்கப்பட்டவர்களில் அதிகளவில் நோய் கண்டறியப்பட்டு வருகிறது.

குவைத்தில் இருந்து வருபவர்களில் பெரும்பான்மையானவர்கள் நோய்த் தாக்கங்களுக்கு உள்ளாகியுள்ள நிலையில், இவர்களுக்கான மருத்துவ நடவடிக்கைகளை அதிகளவில் முன்னெடுக்க வேண்டியுள்ளது. எனினும் வைரஸ் சமூகப் பரவலாக மாறாத வகையில் நாம் செயலாற்றி வருகின்றோம்.

மேலும் நாட்டிற்குள்.கொவிட்-19 தொற்றுநோய் பரவலை கட்டுப்படுத்த நாம் எவ்வளவு முயற்சிகளை எடுத்தும் ஒரு சிலர் அவற்றை மீறி செயற்பட்டு வருகின்றமையையும் அவதானிக்க முடிகிறது.

கொவிட்-19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் பொறுப்பு வெறுமனே எமக்கோ பாதுகாப்பு அதிகாரிகளுக்கோ மட்டுமேயுள்ள கடமை அல்ல.

நாட்டிலுள்ள அனைவருக்கும் இதில் பொறுப்புடன் செயற்படும்கட்டாயம் உள்ளது. வைரஸ் பரவலை கட்டுப்படுத்த பிறப்பிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள் நாட்டில் வாழும் 22 மில்லியன் மக்களுக்கும் பொதுவானது.

ஒரு குடும்பமோ அல்லது அதிகாரத்தில் உள்ள எவருமோ அதனை மீற முடியாது. அவ்வாறு மீறுவதனால் நாம் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் வீணாகின்றது என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அகிம்சையின் ஆற்றல்!

ஒரு தேசத்து ராஜாவுக்கு புத்திரபாக்கியம் இல்லை. வாரிசு இல்லாததனாலே வழக்கப்படி பட்டத்து யானையிடம் ஒரு மாலையைக் கொடுத்து வீதி வழியாக அழைத்துக்கொண்டு வந்தார்கள். அந்த பட்டத்து யானை யார் கழுத்திலே மாலையைப் போடுகிறதோ அவர்தான் ராஜா. அவருக்குத்தான் முடிசூட்ட வேண்டும்.

யானை மாலையோடு வந்து கொண்டு இருக்கிறது. வழியிலே ஒரு துறவி வந்து கொண்டிருந்தார். எல்லாத்தையும் துறந்தவர். யானைக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அவர் கழுத்திலே மாலையைப் போட்டு விட்டது அவ்வளவுதான்.

துறவியை சகல அரச மரியாதையோடு அரண்மனைக்கு அழைத்துக் கொண்டு போனார்கள். எதுக்கு இப்படியெல்லாம் செய்கிறார்கள் என்று அவருக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்னை ஏன் இப்படி இங்கே அழைத்துக்கொண்டு வந்திருக்கிறீர்கள்" என்று கேட்டார். "சுவாமி இப்போ தாங்கள்தான் இந்த நாட்டுக்கு மன்னார். பட்டத்து யானை உங்களைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறது. இது இறைவனின் தீர்ப்பு" என்றார் அமைச்சர். "எனக்கு இந்த அரச பதவி தேவையில்லை. நான் துறவி" என்றார் அவர்.

"சுவாமி இது இறைவனின் திருவுள்ளம். தயவு செய்து குடிமக்களின் நலன் கருதியாவது இந்த அரச பதவியை நீங்க ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றார்கள்.

வேறு வழியில்லாமல் துறவி சம்மதித்தார். அரச பதவியை ஏற்றுக்கொண்டார்.

தாமரை இலைத்தண்ணீர் மாதிரி இவர் எதிலேயும் பற்றுதல் கொள்ளாமல் இராஜாங்க வேலைகளைக் கவனித்து வந்தார்.

இப்படி ஒரு ராஜா இருந்தால்...பக்கத்து நாட்டு அரசன் சும்மா இருப்பானா? உடனே படை எடுத்துக் கொண்டு வந்துவிட்டான் சண்டை போடுவதற்காக. அரண்மனையிலே இருந்த துறவி மன்னனிடம் அமைச்சர்கள் ஓடிவந்து விடயத்தைச் சொன்னார்கள்.

"அந்நிய தேசத்து அரசன் நம்ம நாடு மீது படையெடுத்து வந்திருந்திருக்கிறான்"என்றார்கள்.

"அந்த மன்னன் நம் நாடு மீது ஏன் போர் தொடுத்து இருக்கிறான்? நாம் அவனுக்கு என்ன கெடுதல் செய்தோம்" என்று கேட்டார் துறவி.

"அரசே அவன் நம் மீது போர் தொடுத்திருப்பதற்கு எந்தவித காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை. அவனுடைய படைகள் நம் நாட்டு எல்லைக்குள்ளே புகுந்து விட்டது. தயவு செய்து அவர்களை எதிர்த்துப் போர் செய்ய எங்களுக்கு உத்தரவு கொடுங்கள்" என்றார்கள்.

"வேண்டாம் அது வேண்டாம். அவர்களை எதிர்க்க வேண்டாம். யாராக இருந்தாலும் சண்டை போடுவது தகாத செயல். அமைதியாக இருங்கள் அதுபோதும்" என்றார் துறவி.

"என்ன இது இப்படிச் சொல்கிறாரே" என்று நினைத்தார்கள். இருந்தாலும் என்ன செய்ய முடியும்? பேசாமல் இருந்து விட்டார்கள். படை எடுத்துக் கொண்டு வந்த மன்னன் பார்த்தான்...என்ன இது யாருமே எதிர்த்து சண்டை போட வரவில்லை என்று நினைத்தான். பேசாமல் கிடுகிடு என்று அரண்மனைக்குள் வந்து விட்டான். துறவியைப் பார்த்தான்.

"அரசே! உங்களோடு சண்டை போடுவதற்காக நான் வந்திருக்கிறேன்... என்ன சொல்கிறீர்கள்" என்றான். என்னுடன் சண்டை போட்டுக்கொள்வதாலே உனக்கு என்ன ஆகப் போகிறது. எதற்காக என்னுடன் சண்டை போட வேண்டும் என்கிறாய் என்றார் துறவி.

"நான் உங்கள் தேசத்தை பிடிக்கப் போகிறேன்" என்றான் அவன். இதைக் கேட்டதும் துறவி கடகட என்று சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

"இந்தத் தேசம் உனக்கு வேண்டும் அவ்வளவுதானே. எதற்காக நீ என்னுடன் போராட வேண்டும். இதோ இப்பொழுது முதல் நீதான் இந்த தேசத்துக்கு மன்னன். நானோ அன்றைக்கும் துறவி. இன்றைக்கும் துறவி. வா வந்து இந்த சிம்மாசனத்தில் உட்கார்"என்று சொல்லிவிட்டு எழுந்து விலகி வந்தார். சண்டை போட வந்த மன்னனுக்கு வெட்கமாகப் போய்விட்டது. துறவியின் காலில் பொத்தென்று விழுந்தான்.

ஐயா நான் தப்புச் செய்து விட்டேன். உங்கள் பெருந்தன்மை தெரியாமல் போர் செய்ய வந்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள் என்றான். அது மட்டுமல்ல "அரசே என்னுடைய இராச்சியத்தையும் உங்களுடைய பாதத்திலே சமர்ப்பிக்கிறேன். இரு நாடுகளுக்கும் இனிமேல் நீங்கள்தான் மன்னன். நான் உங்கள் அடிமை. என்னை ஆசீர்வதியுங்கள் என்றார். கத்தியின்றி, இரத்தமின்றி, யுத்தமின்றி அத்துறவி இரு நாடுகளுக்கும் மன்னரானார். இதுதான் அகிம்சையின் வலிமை. தியாகத்தின் பெருமை.

இதைப் புரிந்து கொள்ளாமல் போனதாலேயே தான் உலகத்திற்கே குழப்பம்.

ராஜாக்களிலே வேறு சில ரகங்களும் உண்டு. ஒரு ராஜா அரண்மனையிலே உட்கார்ந்திருந்தார். அமைச்சரும் தளபதியும் வேகமாக ஓடிவந்தார்கள்.

"அரசே அந்நிய தேசத்து மன்னன் நம்முடன் சண்டை போடுவதற்கு படை எடுத்து வந்து கொண்டிருக்கிறான் என்ன செய்கிறது?" உடனே என்னை ஒரு பத்திரமான இடத்துக்கு கொண்டு செல்லுங்கள் என்றார்.

மனிதர்கள் தங்கள் கடமைகளை மறந்து விடுகி றார்கள். ஆனால் உரிமைகளை மட்டும் நினைவில் வைத்துக் கொள்கிறார்கள். - இந்திரா காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தேர்தல் மணியோசைதனை கேட்டதாரோ இங்கு வந்ததாரோ...

கோயில் மணியோசைதனைக் கேட்டதாரோ இங்கு வந்ததாரோ என்ற சினிமாப் பாடல் அந்தக் காலத்தில் அதிகமாக உச்சரிக்கப்பட்டது.

பழைய திரைப்படப் பாடல்களின் இசையும் இனிமையும் இன்றும் நெருட வைக்கும்.

அந்தளவுக்கு அந்தக் காலத்துச் சினிமாப் பாடல்கள் கருத்தாழம் மிக்கதாய் தத்துவத்தை கூறுவதாய் அமைந்தன.

இவை ஒருபுறமிருக்க, கோயிலுக்கு மட்டும் மணியோசை உரித்தன்று.

மாறாக அறிவித்தல்கள் வழங்குவதற்கும் ஆயத்தப்படுத்தல்களுக்கும் மணியோசை இசைக்கப்படுகின்ற நடைமுறை பன்னெடுங் காலமாக உள்ளது.

இந்த அடிப்படையில், பொதுத் தேர்தல் நடப்பதற்கான ஆயத்த மணியோசை கேட்கத் தொடங்கியுள்ளது.

பொதுத் தேர்தலை பிற்போடுமாறு உயர் நீதிமன்றில் முன்வைத்த மனுக்கள் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்ட நிலையில்,

பொதுத் தேர்தலை விரைவாக நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இதற்கு மேலாக, பொதுத் தேர்தலை விரைவில் நடத்தியாக வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மகிந்த தேசப்பிரிய நேற்று முன்தினம் கூறியிருந்தார்.

ஆக, உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பும் தேர்தலை விரைவாக நடத்தி முடிக்க வேண்டும் என்ற தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவரின் அறிவிப்பும் சேர்ந்து பாராளுமன்றத் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளதென்பது உறுதியாகிறது.

சுருங்கக்கூறின் தேர்தல் மணியோசை கேட்கத் தொடங்கியுள்ளது.

இங்கு யாருக்கேனும் தேர்தல் மணியோசை கேட்காமல் இருக்குமாயின் அதுதான் ஆபத்தானது.

ஏனெனில் பொதுத் தேர்தல் என்பது மக்கள் பிரதிநிதிகளைப் பாராளுமன்றத்துக்கு அனுப்புவதற்காக நடைபெறும் தேர்தல்.

எனவே இங்கு பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

தேர்தல் மணியோசை கேட்டதன் காரணமாக வேட்பாளர்கள் வீறு கொண்டெழுந்து, விரைந்து பொதுமக்களாகிய உங்களைத் தேடி வருவார்கள்.

அவ்வாறு வருகின்றவர்கள் தொடர்பில் பொதுமக்கள் அறியாதவர்களாக இருப்பார்களாயின்; நல்லவர்களை, நேர்மையானவர்களை, விலை போகாதவர்களை மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ய முடியாமல் போகும்.

எனவே யார் வந்தாலும் அவர்களிடம் சில கேள்விகளைக் கேட்கத் தமிழ் மக்கள் தயாராக வேண்டும்.

இதற்குப் பொதுமக்கள் தயாராக இல்லாத போது, நமக்கு நாமே பகையும் நமக்கு நாமே துன்பமுமாய் அமைந்து விடும்.

ஆகையால் தேர்தல் மணியோசைதனை கேட்டுக் கொள்ளுங்கள். அந்த மணியோசை கேட்டு இங்கு வருபவர்களிடம் உங்கள் அரசியல் தெளிவைத் தெரியப்படுத்துங்கள். இஃது வாக்கெடுப்பிலும் தெரியட்டும்.

# 6 இடங்களில் 10 முகாம்களை அமைத்து ஆயுதப் பயிற்சி வழங்கினார் சஹ்ரான்

## பயங்கரவாத தடுப்புப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி சாட்சியம்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு முன்னர் சஹ்ரான் ஹாசிம் நாட்டின் 6 இடங்களில் 10 முகாம்களை அமைத்து ஆயுதப் பயிற்சியினை வழங்கியதாக குறித்த தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியம் வழங்கப்பட்டது.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் ஆணைக்குழுவில் சாட்சியமளித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் 3 வது நாளாகவும் சாட்சியம் வழங்கிய குறித்த அதிகாரி, குறித்த பயங்கரவாதத் தாக்குதலை நடத்திய பயங்கரவாதிகள் தாக்குதலுக்கு முன்னர் பதிவு செய்த காணொளி ஊடாக இலங்கையினுள் தாக்குதல்களை நடத்துவதற்கான காரணம் கண்டறியப்பட்டதாக குறிப்பிட்டார்.

குறித்த தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாசிம், ஏனையோருக்கு ஆயுதப் பயிற்சி வழங்கிய இடங்கள் தொடர்பில் ஆணைக்குழு வினவிய போது, அவர் தெரிவிக்கையில், நாட்டில் ஆறு இடங்களில் 10 முகாம்கள் நடத்திச் செல்லப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளது. இதற்கமைய, அம்பாந்தோட்டை - சிப்பிக்குளம், கண்டி - லேவெல்ல, மல்வானை யட்டியேனை, நுவரெலியா- ப்ளக்பூல் மற்றும் சாந்தபுர பிரதேசங்களுடன் மதவாச்சி ரம்பேவ மற்றும் தல்கெஸ்வெள ஆகிய இடங்களில் இந்த முகாம்கள் நடத்திச் செல்லப்பட்டன. மல்வானை யட்டியேனை முகாமினை தவிர ஏனைய அனைத்து முகாம்களிலும் ஆயுதப்பயிற்சி வழங்கியுள்ளதாகவும் அதற்காக ரி-56 துப்பாக்கிகள் மற்றும் கைத்துப்பாக்கிகள் என்பன பயன்படுத்தப்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)

# சரியான நேரத்தில் தேர்தல்களை நடத்த வேண்டும்- லால் விஜேநாயக்க

(கொழும்பு)

எதிர்பார்த்த காலத்தில் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்கள் நடத்தப்படாவிட்டால், பொதுமக்கள் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை இழக்கத் தொடங்குவார்கள் என பிரபல சட்டத்தரணியும் இடதுசாரி அரசியல்வாதியுமான லால் விஜேநாயக்க சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தேர்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றம் மற்றும் அரசாங்கத்தின் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லாத போது, பொதுமக்களின் உண்மையான ஆணைப்படி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததா? என்ற கேள்வி எழும் என்றும் அவர் தெரிவித்தார். மேலும் தேர்தலின் போது மக்களின் ஆணை தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் இல்லையென்றால் நாடு நிலையற்றதாகிவிடும்.

எனவே சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்குவது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் எதிர்காலத்திற்காக ஒரு தேர்தல் நடத்தப்பட வேண்டும், அதிகாரத்திற்கு வரும் அரசாங்கத்தை தேர்ந்தெடுப்பது மக்களின் கட்டளையின் அடிப்படையில் இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஜ-4)

# வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களின் பிரச்சினைகளை தீர்க்க சர்வதேச அமைப்புக்களுடன் ஒப்பந்தம்- தினேஷ்

(கொழும்பு)

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையரின் பிரச்சினைகளை உடனடியாக தீர்ப்பதற்காக, ஐ.நா. தொழிலுக்காக புலம்பெயர்வு தொடர்பான சர்வதேச அமைப்புடன் ஒப்பந்தம் கைச்சாத்திட தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அதாவது ஐரோப்பா, மத்திய கிழக்கு, ஜப்பான், கொரியா, மலேசியா போன்ற நாடுகளில் தொழில் புரியும் இலங்கையர், சில பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளனர்.

இவர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக சுகாதாரம், உயிர் பாதுகாப்பை உறுதி செய்தல், தொழில் ஊடாக ஈட்டிய வருமானத்தை அதிகரித்தல் என்பனவும் இந்த ஒப்பந்தத்தில் அடங்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஓய்வூதிய யோசனை, சேமலாப நிதியம், அதற்கான வைப்பு நிதியை பெறுதல் மற்றும் பணம் அனுப்புகையில் அறவிடும் அதிக கட்டணத்தை குறைத்தல் என்பன குறித்தும் வெளிவிவகார அமைச்சு, ஐ.நா. தொழிலுக்கான புலம்பெயர்வு தொடர்பான சர்வதேச அமைப்புடன் நெருக்கமாக செயற்படுவதாகவும் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

எந்தவொரு மெழுகுவர்த்தியும் இன்னொரு மெழுகுவர்த்தியை ஏற்றுவதால் அணைந்து விடுவதில்லை. எனவே பிறருக்கு உதவுவதை நிறுத்தி விடாதீர்கள். ஏனெனில் அது ஒன்றுதான் உங்கள் வாழ்க்கையை அர்த்தமுடையதாக்கும். -அன்னை தெரேசா

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** சாவகச்சேரி தபாலக வீதி, டச்சு வீதி கண்டுவில், அரசடி ஆசிரியர் வீதி, பெருங்குளம் சந்தி ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில்** தேராவில், உடையார்கட்டு, தேவிபுரம், வள்ளிபுனம், மூங்கிலாறு, சுதந்திரபுரம், குரவில், உடையார்கட்டு 683ஆவது படைப்பிரிவு, 68ஆவது படைப்பிரிவு தலைமையகம், 18 VIR இராணுவமுகாம் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** சாளம்பைக்குளம் ஒரு பகுதி, துட்டுவாகை ஒரு பகுதி, கூமாங்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** சீனத்துறைமுகம், வங்காலை ஒருபகுதி, இசைமலைத்தாழ்வு, வட்டு பித்தன்மடு, புதுக்கா மம் ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும்.

## நீதிமன்ற அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் நாளை 4 ஆம் திகதி வியாழக்கிழமை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளமையால் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் அன்றைய தினம் தவணையிடப்பட்டிருந்த வழக்குகள் யாவும் எதிர்வரும் ஜூலை 7 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் என சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற பதில் பதிவாளர் அறிவித்தார். (2-5)

## ஆன்மீகச் சிந்தனைகள்

### நன்றி மறவாதீர்

- கோபம் வரும் போது கண்ணாடியில் முகத்தைப் பாருங்கள். உங்களுக்கே வெட்கமாகப் போய் விடும்.
- ஆபத்தான சமயத்தில் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளச் சொல்லும் பொய் குற்றமாகாது.
- முதுமைக்குத் தேவையானதை இளமையில் தேடுவதே அறிவுள்ளவனின் செயல்.
- எந்த பாவம் செய்தாலும் தப்பித்து விடலாம். ஆனால், நன்றி மறந்த பாவத்திற்கு மன்னிப்பே கிடையாது.
- செய்த பாவமும், புண்ணியமும் பல மடங்காகப் பெருகி நம்மிடமே திரும்பி வரும்.

# பயங்கரவாதிகளின் பயங்கரத் தாக்குதலில் அப்பாவி மக்கள் 30 பேர் உயிரிழப்பு

## புர்கினோ பாசோவில் சோகம்



(புர்கினோ பாசோ)
புர்கினோ பாசோ நாட்டில் உள்ள கால்நடைச் சந்தையில் பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் அப்பாவி மக்கள் 30 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்று, புர்கினோ பாசோ. இந்த நாட்டில் மத அடிப்படையிலான பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். இம் மதவாதக் குழுக்கள் இடையே அவ்வப்போது மோதல்கள் நடைபெற்று வருகின்றன. இங்கு நிலவி வருகிற வன்முறைக்கு முடிவு கட்ட பாதுகாப்புப் படையினர் போராடி வருகின்றனர். இருப்பினும் வன்முறைக்குப் பயந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்து விட்டனர்.

இந்நிலையில் அங்கு கொம்பீங்கா என்ற இடத்தில் கால்நடைச் சந்தையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் மோட்டார் சைக்கிள்களில் துப்பாக்கி ஏந்திய நபர்கள் வந்து இறங்கினர். அவர்களைப் பார்த்ததும் அங்கிருந்த வியாபாரிகளும் வாடிக்கையாளர்களும் பதற்றத்தில் செய்வது அறியாது திகைத்து நின்றனர். மோட்டார் சைக்கிள்களை விட்டு இறங்கிய நபர்கள், கண் இமைக்கும் நேரத்தில் காட்டுமிராண்டித்தனமாக அங்கு துப்பாக்கிச்சூடு நடத்தினர். அங்கு கூடியிருந்த மக்கள் அனைவரும் பதற்றத்தில் அலறியவாறு ஓட்டம் பிடித்தனர். சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்திய நபர்கள், பலரையும் இரத்த வெள்ளத்தில் சாய்த்து விட்டு அங்கிருந்து தப்பினர்.

அல்கொய்தா மற்றும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஆதரவு பெற்ற புர்கினோ பாசோவின் மத அடிப்படையிலான பயங்கரவாதிகள் மீது அரசுக்கு சந்தேகம் எழுந்துள்ளது. இருப்பினும் இந்தத் தாக்குதலுக்கு எந்தவொரு பயங்கரவாத அமைப்பும் இதுவரை உரிமை கோரவில்லை. (2-5)

# பிரேஸிலின் பலி எண்ணிக்கை 30 ஆயிரத்தைத் தாண்டியது



(றியோடி ஜெனிரோ)
பிரேஸிலில் கொவிட்-19 தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

இதற்கமைய பிரேஸிலில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்கு மொத்தமாக 30 ஆயிரத்து 46 பேர் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 5 இலட்சத்து 29 ஆயிரத்து 405 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் கொரோனா வைரஸ் தொற்றால் அதிக உயிரிழப்பை சந்தித்த நான்காவது நாடாக பிரேஸில் காணப்படுகிறது.

பிரேஸிலில் நேற்று முன்தினம் மட்டும் 14 ஆயிரத்து 556 பேர் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 732 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றுக்கு 2 இலட்சத்து 88 ஆயிரத்து 279 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதுவரை 2 இலட்சத்து 11 ஆயிரத்து 80 பேர் குணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5)

### அகிலத்தை ஆட்டிப் படைக்கும் வைரஸ்;
# இந்தியாவுக்கு ஏழாம் இடம்

(டில்லி)
உலக அளவில் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் 7 ஆவது இடத்தில் இந்தியாவுள்ளது.

சீனாவில் உருவான கொரோனா வைரஸ் உலக நாடுகள் முழுவதையும் ஆட்டிப் படைத்து வருகிறது.

சின்னஞ்சிறிய நாடுகள் முதல் வல்லரசு நாடுகள் வரை அனைத்து நாடுகளுக்கும் பரவி கிட்டத்தட்ட 63 இலட்சம் பேரை கொரோனா பாதிப்புக்கு உள்ளாக்கி இருக்கிறது. நேற்று வரை இந்த வைரஸ் பிடியில் சிக்கி உலகம் முழுவதும் சுமார் 3 இலட்சத்து 75 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியாவிலும் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகிறது. இவ்வாறு கடந்த சில தினங்களாக வெளியிடப்படும் பட்டியல் ஒவ்வொரு நாளும் கொரோனாவால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை காட்டுகிறது. அந்த வகையில் இந்தியாவில் முன்னெப்போதும் இல்லாத வகையில் 24 மணி நேரத்தில் 8 ஆயிரத்து 392 பேருக்கு கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 90 ஆயிரத்து 535 ஆக உயர்ந்துள்ளது.

இதனால் கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் 9 ஆவது இடத்தில் இருந்து, 7 ஆவது இடத்துக்கு இந்தியா சென்றுள்ளது. இந்த விபரம் உலக சுகாதார நிறுவனத்தின் தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் 3 இடங்களில் முறையே அமெரிக்கா, பிரேஸில், ரஷ்யா உள்ளன. அடுத்தடுத்த இடங்களில் இங்கிலாந்து, ஸ்பெயின், இத்தாலி ஆகிய நாடுகளுக்கு பிறகு 7 ஆவது இடத்தில் இந்தியாவும் உள்ளது. (2-5)

## ஜோர்ஜ் ஃபிலாய்ட்

# மரணத்திற்கு நீதிகோரும் போராட்டங்கள்; 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது

(வோஷிங்டன்)
நிராயுதபாணியான கறுப்பின மனிதர் ஜோர்ஜ் ஃபிலாய்டின் மரணத்துக்கு நீதிகோரி அமெரிக்காவின் பல்வேறு நகரங்களிலும் இடம்பெற்றுவரும் போராட்டங்களின் போது உத்தரவுகளை மீறிய 4,000 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வன்முறையில் ஈடுபட்டவர்களும் ஊரடங்கு உத்தரவை மீறிச் செயற்பட்டவர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

போராட்டக்காரர்களை கட்டுப்படுத்த தலைநகர் வோஷிங்டனுக்கு மேலதிகமாக 1,700 படை வீரர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர். வெள்ளை மாளிகை போராட்டக்காரர்களால் சூழப்பட்டதன் பின்னணியில் இவர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

அட்லாண்டா, சிகாகோ, டென்வர், லொஸ் ஏஞ்சல்ஸ், சான் பிரான்சிஸ்கோ மற்றும் சியாட்டில் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வோஷிங்டன் மற்றும் பிற 15 மாநிலங்களில் தேசிய பொலிஸ்படை வீரர்கள் மற்றும் விமானப்படை வீரர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். இந்தப் போராட்டங்களின் போது, இண்டியானா பொலிஸில் இரண்டு இறப்புகள் பதிவாகியுள்ளன.



46 வயதான ஜோர்ஜ் ஃபிலொய்ட், நான்கு மினியாபோலிஸ் பொலிஸ் அதிகாரிகளால் கடந்த 25 ஆம் திகதி கொல்லப்பட்டார். இதற்கு நீதி கோரியும் பொலிஸ் அதிகாரிகள் தண்டிக்கப்பட வேண்டுமெனவும் நியூஸிலாந்து, பிரித்தானியா மற்றும் அமெரிக்காவில் போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-5)

## காவலாளி...

பருத்தித்துறை கோட்டக் கல்வி அலுவலகத்தின் காவலாளி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று செவ் வாய்க்கிழமை காலை இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கிழவித்தோட்டம், கரவெட்டி மத்தியைச் சேர்ந்த 59 வயதுடைய பத்மநாதன் தெய்வேந்திரன் என பொலிஸார் தெரிவித்தனர்.

மந்திகையில் உள்ள பருத்தித்துறை கோட்டக்கல்வி அலுவலகத்தில் காவலாளியாக கடமையாற்றிவரும் அவர் இரவு படுக்கைக்கு சென்ற நிலையில் நேற்று செவ் வாய்க்கிழமை காலை சடலமாகக் கண்டு பிடிக்கப்பட்டார்.

சம்பவ இடத்துக்கு சென்ற பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணைகளை மேற்கொண்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பருத்தித்துறை பொலிஸாருக்கு கோரிக்கை விடுத்துள்ளார். (ம-3,60)

## பேக்கரி பொருட்...

பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே ஜயவர்தன தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட வரித் திருத்தங்களால் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் பேக்கரி உற்பத்திகளுக்கு தேவையான மூலப் பொருட்களின் விலை பாரியளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மூலப் பொருட்களுக்கு சலுகை வழங்காவிடின் உற்பத்தி பொருட்களுக்கான விலையும் அதிகரிக்கப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3,8)

## யாழில் நேற்று...

குறித்த பகுதிகளில், நேற்று மாலை இடம் பெற்ற தேடுதல் வேட்டையின்போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

22 வயதுடைய சந்தேகநபர் 60 மில்லிகிராம் கெரோயினுடன் கோண்டாவில் பகுதியிலும் 30, 34 வயதுடைய சந்தேகநபர்கள் 60 மில்லிகிராம் கெரோயின் மற்றும் 50 மில்லிகிராம் கஞ்சாவுடன் உரும்பிராய்ப் பகுதியிலும் கைது செய்யப்பட்டனர்.

குறித்த சந்தேகநபர்கள் இன்று மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ம-3,8)

## வாக்குச்சீட்டு...

அனைத்து மனுக்களையும் தள்ளுபடி செய்து ஐந்து பேர் கொண்ட உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் நேற்று மாலை உத்தரவிட்டது.

இந்நிலையிலேயே, வாக்குச்சீட்டு அச்சிடும் பணி தொடங்கப்பட்டுள்ளது. (ம-3)

## வியாழன்,...

வித்துள்ளது.

ஜூன் 06ஆம் திகதி முதல் அனைத்து மாவட்டங்களிலும் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் முன்னர் போன்று இரவு 10.00 மணி முதல் மறுநாள் அதிகாலை 4.00 மணிவரை மட்டுமே அமுல்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாளை வியாழக்கிழமை அரச விடுமுறைதினமாக அரசதகவல்திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## பொதுப் போக்கு,...

கிழமை முதல் இடம்பெறும் என்று பயணிகள் போக்குவரத்து அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இவ்வாறு போக்குவரத்துச் சேவைகள் இடம்பெறும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மாகாணங்களுக்கு இடையேயான போக்குவரத்துச் சேவைகள் கடந்த மே 26ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட போதும் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்குள் அனுமதிக்கப்படவில்லை.

இந்த நிலையில், சுகாதார அதிகாரிகளுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து எதிர்வரும் திங்கட்கிழமை முதல் அனைதது மாவட்டங்களுக்கும் இடையிலான போக்குவரத்துக்கு அனுமதியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. (ம-3)

## தேர்தல் ஓகஸ்ட்...

ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதற்கான அறிவிப்பை விடுத்து தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட அதி சிறப்பு வர்த்தமானி அறிவிப்பை சவாலுக்கு உட்படுத்தும் அடிப்படை உரிமை மனுக்களைத் தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றால் நேற்று மாலை கட்டளை வழங்கப்பட்டது.

இதனையடுத்து, தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடலின் பின்னர் இன்று பொதுத் தேர்தலுக்கான திகதி குறித்து அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

அத்தோடு பொதுத் தேர்தல் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் இன்று ஆணைக்குழுவில் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் தீர்மானிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## 23 குண்டுகள்...

பட்டுள்ளன.

கடந்த சில நாட்களுக்கு முன் குரும்பசிட்டி அம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள தனியார் காணி ஒன்றில் உள்ள கிணற்றில் வெடி பொருட்கள் காணப்பட்டன.

இது குறித்து பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டது.

இதையடுத்து, நேற்று முன்னெடுக்கப்பட்ட அகழ்வுப்பணியில் 23 குண்டுகள் மீட்கப்பட்டதுடன், மேலும் வெடிபொருட்கள் காணப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது.

இதையடுத்து குறித்த கிணற்றில் அகழ்வுப்பணிகள் தொடர்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-3,104)

## எலிக் காய்ச்சல்...

படும் விவசாயிகள் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில், தொற்று நோயியல் தடுப்புப் பிரிவின் தலைமை தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளதாவது,

நாடளாவிய ரீதியில் நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளமையினாலும், தரிசு நிலங்களில் பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாலும் எலிக் காய்ச்சல் பரவக் கூடிய ஆபத்து காணப்படுகிறது.

அத்தோடு கடந்த சில வாரங்களாக கடும் மழையுடனான காலநிலை நிலவியதால் எலிக் காய்ச்சல் தீவிரமடையக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளதால் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்றார்.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நோயாளிகளுக்கு டெங்கு நோய் பரவும் ஆபத்துக்கள் உள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

டெங்கு நோய் தடுப்புப் பிரிவு கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

டெங்கு நோயின் பிரதான அறிகுறியே அதிக காய்ச்சலாகும். அதிக காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக தங்கள் பிரதேச மருத்துவமனைகளில் அனுமதியாக வேண்டும்.

நுளம்புகள் கடிப்பதற்கு இடமளிக்க வேண்டாம். நுளம்பு வலைகளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

நுளம்புகளிடம் இருந்து தங்களை தாங்களே காப்பாற்றிக் கொள்ள வேண்டும். டெங்கு என்பது சிகிச்சையின் மூலம் குணமாக்க கூடிய நோயாகும்.

கொரோனா வைரஸ் நோயாளிகளுக்கும் டெங்கு ஏற்படும் ஆபத்துக்கள் அதிகமாக உள்ளதென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-3)

## விசாரணைக்கு...

இணக்கத்துடன் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரியவினால் இந்த தீர்ப்பு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மனுக்கள் தொடர்பில், பிரதிவாதிகள் தரப்பினரால் முன்வைக்கப்பட்ட ஆட்சேபனைகளை ஐவர் அடங்கிய நீதிபதி குழாமின் பெரும்பான்மை நீதிபதிகளின் இணக்கத்துடன் நிராகரிக்க தீர்மானிக்கப்பட்டதாக அவர் தீர்ப்பினை அறிவித்தார்.

ஜூன் மாதம் 20ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துதல் மற்றும் ஜனாதிபதியால் பாராளுமன்றம் கலைக்கப்பட்டமையை சவாலுக்கு உட்படுத்தி ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், ஊடகவியாளர் விக்டர் ஐவன் உள்ளிட்ட 07 பிரதிவாதிகளால் உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

குறித்த மனுக்களுக்கு எதிராக, வணக்கத்துக்குரிய முருத்தெட்டுவே தேரர், வணக்கத்துக்குரிய அதபத்துகந்தே ஆனந்த தேரர், கலாநிதி குணதாச அமரசேகர, சட்டத்தரணி பிரேமநாத் தொலவத்த உள்ளிட்ட 15 தரப்பினரால் இடைநிலை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

குறித்த மனுக்கள் உயர்நீதிமன்றில் 10 நாட்களாக பரிசீலிக்கப்பட்ட நிலையில் குறித்த மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா? அல்லது நிராகரிப்பதா? என்பது தொடர்பான தீர்ப்பு நேற்றைய தினம் அறிவிக்கப்படும் என நீதிபதிகள் குழாம் நேற்று முன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## வவுனியாவில் 14 மோட்டார் குண்டுகள் மீட்பு

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் 14 மோட்டார் குண்டுகள் விசேட அதிரடிப் படையினரால் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

வவுனியா, கனகராயன்குளம் பகுதியில் உள்ள குறிசுட்டகுளத்தை புனரமைப்பு செய்வதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றன. இதன் போது வெடிக்காத நிலையில் மோட்டார் குண்டுகள் காணப்படுவதை அவதானித்த திருத்த பணியாளர்கள் கனகராயன்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசேட அதிரடிப் படையினரை வரவழைத்து சோதனை செய்த போது புதையுண்டு இருந்த 14 மோட்டர் குண்டுகள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றை மீட்ட அதிரடிப படையினர் அவ்விடத்தில் மேலும் ஆயுதங்கள் இருக்கலாம் என்ற சந்தேகத்தில் நீதிமன்ற அனுமதிபெற்று தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-3,250)

## நல்லைக்குமரன் மலருக்கு ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் மகோற்சவ காலத்தில் யாழ். மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழு வருடந்தோறும் வெளியிட்டு வரும் நல்லைக் குமரன் (28) மலருக்கு ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்களை எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்பாக saivasamayavivaharam@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ம-3)

## இணுவிலில்...

கபிலன் என்ற இளைஞனே தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை யில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள் ளார் என்று பொலிஸார் கூறினர்.

மேலதிக விசா ரணைகளை சுன் னாகம் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-3)


மஹஜன சம்பத

| | |
|---|---|
| திகதி | 2020/06/02 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4145 |

ஆங்கில எழுத்து: D
வெல்லப்பட்ட இலக்கங்கள்: 0 6 0 3 9 1

தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB

| | |
|---|---|
| சீட்டிழுப்பு திகதி | 02-06-2020 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2439 |

ஆங்கில எழுத்து: J
வெற்றி இலக்கங்கள்: 18 29 64 76

தேசிய லொத்தர் சபை

கோடிபதி கப்ருக

சீட்டிழுப்பு வாரம்: 579
திகதி: 02.06.2020
வர்ணம்: இளஞ்சிவப்பு

S 18 26 37 56

அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 82,446,200/-

வர்த்தக சந்தையில் தொற்று நோய் தொடர்பான பிரச்சனை காரணமாக 31.03.2020 என அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>KK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி ADA KOTIPATHI

சீட்டிழுப்பு இல: 936
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.06.02

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 60,481,355/-

வெற்றி இலக்கங்கள்: 13 27 29 49
ஆங்கில எழுத்து: V

வர்த்தக சந்தையில் தொற்று நோய் தொடர்பான பிரச்சனை காரணமாக 2020.04.07 என அச்சிடப்பட்ட லொத்தர் சீட்டுக்கள் இந்த சீட்டிழுப்பில் செல்லுபடியாகும்.

ஜயோதா உத்தியோகபூர்வ முடிவுகள்

| | |
|---|---|
| வெற்றி வாரம் | 1660 |
| சீட்டிழுக்கப்படவேண்டிய திகதி | 31/03/2020 |
| சீட்டிழுக்கப்பட்ட திகதி | 02/06/2020 |

வெற்றி இலக்கங்கள்: 27 34 36 51
ஆங்கில எழுத்து: B

தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.48, 839,492

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 02.06.2020 | 2822 | சிவப்பு |

ராசி: கன்னி
வெற்றி இலக்கங்கள்: 02 52 53 54
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,577,386/=

டபள் சான்ஸ் விசேட இல.

ரூ.500 பரிசுக்காக 6834

ரூ.100 பரிசுக்காக 331


2020/06/03 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்
07.12.1934

மறைவு
07.05.2020

## அமரர் சுப்பிரமணியம் பரஞ்சோதி

திங்களொன்று ஆனதப்பா
அன்பு கொண்ட உம் வதனம்
அருகினில் இருப்பது போல்
உணர்கின்றோம் அன்பால் என்றும்!

கடந்த 07.05.2020 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அமரர் சுப்பிரமணியம் பரஞ்சோதி அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 04.06.2020 வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று 06.06.2020 சனிக்கிழமை அன்னாரது இல்லத்தில் மு.ப 10.30 மணியளவில் சபிண்டீகரணக் கிரியையும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும்.

மேலும் எமது குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வருகைதந்து ஆறுதல் தெரிவித்தோர், சகல வழிகளிலும் உதவி புரிந்தோர், இறுதிச் சடங்கில் பங்குபற்றியவர்களுக்கும், தொலைபேசி, முகநூல் வாயிலாக தொடர்பு கொண்டு ஆறுதல் தெரிவித்தோர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பம் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்பர்சிட்டி, பருத்தித்துறை.

தகவல் : குடும்பத்தினர்
T.P.No. : 077 471 8766

(C-9659)

### உயர் நீதிமன்றத் தீர்ப்பையடுத்து

# வவுனியாவில் வெடி கொழுத்திக் கொண்டாட்டம்

(வவுனியா)

பாராளுமன்றம் கலைக்கப்பட்டமை மற்றும் தேர்தல் திகதியிட்ட வர்த்தமானி என்பவற்றை தடை செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் நேற்று மாலை நிராகரித்தைத் தொடர்ந்து வவுனியா நகரில் பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர்கள் பட்டாசு கொழுத்தி கொண்டாடினார்கள்.

பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் வேட்பாளர்கள் வவுனியா பழைய பேருந்து நிலையம், நகரப்பகுதி என்பவற்றில் தமது ஆதரவாளர்களுடன் வருகை தந்து வெடிகொழுத்தி நீதிமன்ற தீர்ப்பு குறித்து தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (ம-3,250)


## விற்பனைக்கு



அரச அங்கீகார முத்திரையிடப்பட்ட டிஜிற்றல் (Digital) நிறுவைத் தராசு வகைகள் யாவும் ஒருவருட உத்தரவாதத்துடன் விற்பனைக்கு உண்டு.

நந்தலாலா இரும்பகம்
29, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

021 222 6234
077 780 5950

(2944)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 / 021 567 1532

## இலங்கை விசா நீடிப்பு

வெளிநாட்டிலிருந்து இலங்கை வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு யாழ்ப்பாணத்திலேயே செய்து கொடுக்கப்படும்.

VISA EXTENSION (விசா நீடிப்பு)
FOR FOREIGN PASSPORT

எமது கிளைகள்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி |
| நெல்லியடி | கொடிகாமம் |
| புதுக்குடியிருப்பு | சுன்னாகம் |
| மருதங்கேணி | பருத்தித்துறை |
| சாவகச்சேரி | திருகோணமலை |
| மாணிப்பாய் | வல்வெட்டித்துறை |



(C-9624)

V2 TRAVELS 0768227499


## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள அச்சகம் ஒன்றிற்கு கணனி தட்டச்சு மற்றும் Coral Draw வில் தேர்ச்சியுள்ள பணியாளர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் தொடர்புகொள்ளவும்.

077 282 4321

(2943)


# மரண அறிவித்தல்



## பாலகிருஷ்ணன் ஜெயதீஸ்வரன்

உரும்பிராய் வடக்கு உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பாலகிருஷ்ணன் ஜெயதீஸ்வரன் அவர்கள் 01.06.2020 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பாலகிருஷ்ணன் - பரிமளம் தம்பதியினரின் அன்பு மகனும் புஸ்பலீலாவின் அன்புக் கணவரும் குமாரசாமி - பூமணியம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் நர்மதா (யாழ். மாநகர சபை உறுப்பினர்), கிருத்திகா (யாழ் பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவி - கலைப்பிரிவு), அனோஷன் (சனச அபிவிருத்தி வங்கி உத்தியோகத்தர்) அவர்களின் அன்புத் தந்தையும் Dr.ஜெயராணி, ஜெயராஜன், ஜெயமோகன், ஜெயபவானி, ஜெயசீலன், ஜெயச்சந்திரன், ஜெயரஜினி ஆகியோரின் சகோதரரும், Dr.சத்தியப்பிரகாசம், ரதிமனோகரி, மனோன்மணி, செல்வேந்திரன், யோகேஸ்வரி, சந்திரவதனம் (லீலா), மனோகரன் ஆகியோரின் மைத்துனரும் விஜயகாந்தின் (செயலாளர் - முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சி) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.06.2020 இன்று புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளன் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உரும்பிராய்வடக்கு,
உரும்பிராய்.

தகவல் : குடும்பத்தினர்
0773624334

(C-9658)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.06.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் வலம்புரியும் இணைந்து வழங்கும் கல்விச் சேவை

# தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை

நேரம்: ஒரு மணித்தியாலம் 15 நிமிடம் — வினாப்பத்திரம் - 02

1. பின்வரும் பாடலை வாசித்து வினாக்களுக்கு விடை தருக?

கோடிகோடி பணத்தினால்
மாடிவீடு கட்டுவர்
கோடிகோடி மணலினால்
வீடு நாங்கள் கட்டினோம்.

செங்கல் தேவையில்லையே!
சீமிண்டும் தேவையில்லையே
எங்கள் வீட்டைக் கட்டிட
இரும்பும் தேவையில்லையே!

(1) பாடலில் எதனால் வீடுகட்டியதாகக் கூறப்படுகின்றது?
..............................................................

(2) இல்லம் என்பதன் ஒத்தகருத்துச் சொல் யாது?
..............................................................

(3) நாம் என்பதன் பன்மைச் சொல் யாது?
..............................................................

(4) பந்தியில் வந்த அடுக்குத் தொடர் யாது?
..............................................................

(5) மணலில் வீடுகட்டுவதற்கு எதுதேவையில்லை எனக் குறிப்பிடப்படு கின்றது?
..............................................................

(6) தன்மை பன்மைச் சொல் ஒன்றுதருக?
..............................................................

2. சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக?

(1) தெரியுமா? / எவ்வளவு / கடினம் / எழுதுவது
..............................................................

(2) அழிக்கிறேன் / மட்டும் / தானே / நான் / தவறுகளை
..............................................................

3. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக?
(1)தேனீர் : ..............................................
(2)தென்மாகாணம்: ..............................................
(3)முந்நூறு : ..............................................

4. பின்வருவனவற்றிற்குரிய எழுத்து வழக்குச் சொல்லை எழுதுக?
(1)வெத்திலை : ..............................................
(2)பொயிலை : ..............................................

5. பின்வரும் மரபுத் தொடரின் கருத்து யாது?
(1)கைதூக்குதல் : ..............................................
(2)சாக்குப் போக்குச் சொல்லுதல் : ..............................................

6

| | ஆண் | பெண் |
|---|---|---|
| குதிரை | | |
| மயில் | | |

7. உனக்கென்ன தைரியம் சிங்கராஜாவையே கழப்பதற்கு தைரியம் உனக்கு எப்படி வந்தது. வாக்கியத்திற்குப் பொருத்தமான நிறுத்தற் குறியீட்டை இடுக.
..............................................................
..............................................................
..............................................................

8. சரியான சொல்லைத் தெரிவு செய்க
(1)கண்ணன் அல்லும்ப கலுமாக................ (முயற்சி,முயட்சி,முயச்சி) செய்தான்.
(2)அதிகாலையில் கடுமையான................. (பாணி,பணி,பனி) பெய்தது.
(3)அன்றைய................. (இராச்சியம், இராட்சியங்கள், இராட்சியங்கள்) மறைந்துபோயின.

9. பின்வரும் இணைமொழியின் கருத்துக்களை எழுதுக.
(1)அல்லும் பகலும் : ..............................................
(2)கூனிகுலாவி : ..............................................

10. பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க?
(1)இன்று இரவு.............. (மலை,மழை) பெய்தது.
(2)சுவரில் ................ (ஆனி,ஆணி) அறைந்தது.

11. பின்வரும் தமிழ்ச் சொற்களைஆங்கிலத்தில் எழுதுக?
(1)விசில்: ................
(2)துடுப்பு: ................

12. பின்வரும் ஆங்கிலச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக?
(1)Cabbage : ................
(2)Meat : ................

13. பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக?
(1)வரகா : ................
(2)திவுல்: ................

14. பின்வரும் சொற்கள் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினை எழுதுக?
(1) நாளைகுளிக்கவும் : ................
(2)இன்று வேண்டாம் : ................

15

$$\begin{array}{r} 292 \\ +\ 153 \\ \hline 445 \\ \hline \end{array}$$

இக்கூட்டல் செயற்பாட்டில் கொண்டு செல்லும் இடம் யாது?
..............................................

16. 2020 எனும் எண்ணை எண்சட்டத்தில் குறித்துக் காட்டுக?




17. 350g சீனியின் விலை 49.00 எனின் 1kg 500g சீனியின் விலை யாது?
..............................................

18. ஒருவீட்டிலுள்ள தாயும், தந்தையும், அவர்களது 03 ஆண் பிள்ளைகளும், 03 பெண் பிள்ளைகளும், அவர்களின் கணவன்மார்களும், கணவன்மார்களின் தாய் தந்தையரும் ஒன்றாக இருந்து உணவருந்தினர். உணவருந்தியோர் எத்தனை பேர்?
..............................................

19. 24 m உயரமான குவளையின் அடியில் தவளை ஒன்றுஉள்ளது. இது 4m ஏறி 2m சறுக்கும் எனின் எத்தனையாவது தடவைவெளியே வரும்?
..............................................

20. ஒன்று தொடக்கம் பதினைந்து வரை உள்ள முதன்மை எண்களின் எண்ணிக்கை யாது?
..............................................

21. இரண்டு தந்தையும், இரண்டு மகனும் ஒருகாரில் பயணம் செய்தனர் எனின் அதில் பயணம் செய்த மனிதர்களின் குறைந்தபட்ச எண்ணிக்கை யாது?
..............................................

22. அதிசயகுளம் ஒன்றில் பூத்த பூவில் இரண்டும் டாங்கு பூ அடுத்த நாள் பூக்கும் எனில் 25 ஆம் திகதி, புதன்கிழமை குளமானது நிரம்பி இருக்கும் எனில்

(1)கால்வாசிகுளம் நிரம்பியது எத்தனையாம் திகதி?
..............................................
என்னகிழமை?
..............................................


23. பத்துசிவப்புநிற மாபிள்களும், 10 மஞ்சள் நிறமாபிள்களும் ஒரு கூடையில் இருந்தன. ஒருசோடி மஞ்சள் நிற மாபிளை நிச்சயமாக எடுப்பதற்கு எத்தனை தடவை எடுக்கவேண்டும்?
..............................................

24. பத்திற்கும் முப்பதிற்கும் இடைப்பட்ட 2, 3 ஆல் வகுபடும் இலக்கங்கள் எவை?
..............................................

25.மூன்றுமீற்றர் நீளமும்,ஒருமீற்றர் அகலமும் உடைய சுவருக்கு தீந்தை பூசுவதற்கு 750 ml தீந்தை தேவை. இதற்கான செலவு ரூபா 600 எனின் நான்கு மீற்றர் நீளமும் மூன்று மீற்றர் அகலமும் உடைய சுவருக்குத் தீந்தை பூச எவ்வளவு பணம் செலவாகும்?

..................................................................

26.உருவில் 0.5 பகுதியைநிழற்றுக.



27.ஒரு லீற்றர் பாலின் விலை 36 ரூபா எனின் 2 லீற்றர் 750 மில்லிலீற்றர் பாலின் விலை யாது?

..................................................................

28.நிசாரைவிட நியாஸ் உயரமானவன்.ஆனால் கரிமைவிடக் கட்டையானவன். பசாரைப் பார்க்கிலும் கரிம் உயரமானவன். பசார் நியாசைவிடக் கட்டையானவன்.

(1)உயரம் குறைந்தது யார்? : ................................

(2)உயரம் கூடியது யார்? : ................................

(3)இரண்டாவது உயரம் குறைந்தவர் யார்? : ................................

29.சூரிய நமஸ்காரத்தில் ஒரே செயற்பாடுகள் உள்ளன. அதை சரியாக காட்டும் விடை யாது?

(1) 5, 1 (2) 6, 10 (3) 2, 11

30.ஊசித்துளைக் கமராவை உருவாக்க பயன்படும் பொருளாக அமையாதது?

(1) ரிசுத் தாள் (2) பேப்பர் (3) குண்டூசி

31.| N | S | S | N | இவ்விருகாந்தங்களினாலும் சிலநிமிடங்களின் பின் நடக்கக் கூடிய செயல்:

(1) தள்ளும் (2) கவரும் (3) கூற முடியாது

32.தண்டுகளில் உணவு சேமிக்கும் தாவரம்

(1) இஞ்சி (2) மரவள்ளி (3) கரும்பு

33.நீரிழிவு நோய்க்கான காரணமாக அமைவது

(1) உடன் உணவு (2) கொழுப்புணவு (3) இனிப்புணவு

34.விற்றமின் D போசாக்கு குறைபாட்டால் ஏற்படும் தாக்கம்:

(1) வாய் சார்ந்த நோய்கள்

(2) பசியின்மை

(3) எலும்புநோய்கள் ஏற்படல்

35.இரையினைக் கண்டறிவதற்கு மீசையைக் கொண்டிருக்கும் பிராணி:

(1) ஹெமீனியா (2) சிறுத்தை (3) பூனை

36.தேசம் நமது தெய்வம்.....எனத் தொடங்கும் பாடல் யாரால் பாடப்பட்டது?

(1) கவிஞர் வாகரைவாணன்

(2) மயிலங்கூடல்.த.கனகரத்தினம்

(3) வி.என்.எஸ்.உதயசந்திரன்

37.தொலைக்காட்சி பார்த்தால் கிடைக்கும் பிரதிகூலம்:

(1) உலகச் செய்திகளைக் கேட்டறியலாம்

(2) நினைவாற்றல் பாதிக்கப்படும்

(3) எமக்குத் தேவையான விடயங்களை நாமே பார்க்கமுடியும்

38.இலுப்பை,கொன்றை பூக்கும் மாதம்:

(1) ஆடி (2) ஆனி (3) ஆவணி

39.அந்தமில் நாடா பயன்படுத்துவது:

(1) துவிச்சக்கரவண்டி (2) தையல் இயந்திரம் (3) அரைக்கும் இயந்திரம்

40.ஆதர் சி. கிளார்க் பிறந்த இடம்:

(1) அமெரிக்கா (2) ஸ்கொட்லாந்து (3) இங்கிலாங்து

41.காலில் பாம்பு தீண்டியவுடன் ஏற்படக்கூடிய ஒரு பாதிப்பு:

(1) உயிரிழப்பு

(2) தூயநீரினால் கழுவுதல்

(3) கடித்த இடத்தை துணியினால் கட்டுதல்

42.தேநீர் கோப்பையை வீட்டில் எவ்வாறு பயன்படுத்துவர்?

(1) தனிப்பட்ட வகையில்

(2) பொதுவான வகையில்

(3) கூற முடியாது

43.தேய்வுற்றிருந்தால் எண்ணெய் அல்லது உதிரிப்பாகங்கள் இட்டுத் திருத்தம் செய்யும் உபகரணம்:

(1) செருப்பு (2) கணித உபகரணப் பெட்டி (3) கப்பி

44.நீரில் மூழ்கிய ஒருவர் தன்னைக் காப்பாற்ற உடனடியாக செய்யவேண்டியது:

(1) உதவிகோரி சத்தமிடல்

(2) அமைதியாக நீரினுள் இருத்தல்

(3) இறத்தல்

45.அதிவேகப் பாதையைக் குறிக்கப் பயன்படும் நிறம் எது?

(1) சிவப்பு (2) ஊதா (3) கறுப்பு

46.சுவட்டு நிகழ்ச்சியில் ஒன்று:

(1) நீளம் பாய்தல் (2) குண்டு எறிதல் (3) 100 மீற்றர்ஓட்டம்

47.உடலை ஆயத்தப்படுத்தல் செயற்பாட்டின் படிநிலைகள்:

(1) 09 (2) 08 (3) 7

48.சிகிரியா அமைந்துள்ள மாகாணம்:

(1) வடமத்தியமாகாணம்

(2) மத்தியமாகாணம்

(3) சப்பிரகமுவமாகாணம்

49.மரமுந்திரிகை முளைப்பதற்கு எடுக்கும் நாட்கள் எத்தனை?

(1) 14 (2) 13 (3) 12

50.பின்வருவனவற்றுள் முதலில் முளைக்கக்கூடிய வித்து

(1) பாசிப்பயறு (2) நெல் (3) சோளம்

51.சூரியகிரகணம் தோன்றுவது?

(1) பௌர்ணமி தினத்தில்

(2) அமாவாசைதினத்தில்

(3) நள்ளிரவு

52.களனி கங்கை கலக்கும் இடம்:

(1) கொழும்பு (2) களுத்துறை (3) காலி

53.மிகப்பெரிய சமுத்திரம் யாது?

(1) ஆட்டிக் சமுத்திரம் (2) பசுபிக் சமுத்திரம் (3) இந்துசமுத்திரம்

54.WWW என்பதன் விரிவாக்கம் என்ன?

(1) வையகவிரிவுவலை (2) மின்மணி (3) உலக இணையம்

55.விரைவில் நஞ்சாகக்கூடிய கிழங்கு?

(1) உருளைக்கிழங்கு (2) மரவள்ளி (3) வத்தாளை

56.காசுக்கட்டளைஅனுப்பசெல்ல வேண்டிய இடம்:

(1) நூலகம் (2) வங்கி (3) தபாலகம்

57.கண்ணால் காணக்கூடிய கோள் ஒன்று தருக?

(1) புதன் (2) வியாழன் (3) வெள்ளி

58.உடலுக்கு சக்தியைக் கொடுக்கும் போசணைக் கூறு யாது?

(2) கொழுப்பு (2) புரதம் (3) மாப்பொருள்

59.முதன்மைநிலை ஒன்றுக்குரிய உடலியக்க செயற்பாட்டின் நேரம்:

(1) 20 நிமிடம் (2) 25 நிமிடம் (3) 30 நிமிடம்

60.வீட்டுத் தோட்டம் அழகானது எனும் தலைப்பில் ஐந்து சொல்லுக்கு குறையாமல் 03 வாக்கியம் அமைக்குக.

1.................................................................

2.................................................................

3.................................................................

## க.பொ.த. (சா/த) கத்தோலிக்க திருமறை விடைகள் பகுதி -01

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1) | 1 | 11) | 3 | 21) | 1 | 31) | 2 |
| 2) | 3 | 12) | 2 | 22) | 2 | 32) | 3 |
| 3) | 2 | 13) | 4 | 23) | 2 | 33) | 2 |
| 4) | 4 | 14) | 2 | 24) | 2 | 34) | 4 |
| 5) | 1 | 15) | 1 | 25) | 4 | 35) | 2 |
| 6) | 3 | 16) | 3 | 26) | 1 | 36) | 4 |
| 7) | 2 | 17) | 1 | 27) | 3 | 37) | 3 |
| 8) | 4 | 18) | 2 | 28) | 2 | 38) | 1 |
| 9) | 4 | 19) | 1 | 29) | 4 | 39) | 4 |
| 10) | 1 | 20) | 4 | 30) | 3 | 40) | 1 |


கொரோனா இடர்காலத்தை கருத்தில்கொண்டு



வடக்கு மாகாண கல்வி அமைச்சும் வலம்புரியும் இணைந்து வழங்கும் மாணவர்களுக்கான கல்விச் சேவை

திங்கள் முதல் வெள்ளி வரை

மாதிரிவினாத் தாள்கள் : ☞ தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை

☞ க.பொ.த. (சா.த) பரீட்சை

☞ க.பொ.த. (உ.த) பரீட்சை

மாதிரி வினாத்தாள்களின் இணைப்பு வலம்புரி நாளிதழுடன்

# வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களமும் வலம்புரியும் இணைந்து வழங்கும் கல்விச் சேவை

# க.பொ.த. (உ/த) தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்

**நேரம்: இரண்டு மணித்தியாலம்** **வினாப்பத்திரம் - 01**

01. பின்வரும் சேதனப்பதார்த்தங்கள் தொடர்பாக தவறானது?
1) மாப்பொருள் - தாவரக்கலங்களின் சேமிப்புக்கூறு
2) செலுலோஸ் - தாவரக்கலங்களின் கலச்சுவர் கூறு
3) கைற்றின் - பங்கசுக்களின் கலச்சுவர் கூறு
4) கிளைக்கோஜன் - விலங்குக்கலங்களின் சேமிப்புக்கூறு
5) இலிக்னின் - ஒட்டுக்கலவிழையங்களின் கலச்சுவரின் துணைப்படிவு

02. பற்றீரியா, கிளாமிடோமொனஸ், மதுவம் ஆகியவற்றிற்குப் பொதுவான ஓர் இயல்பாக அமைவது,
1) ஓர் ஒழுங்கமைந்த கரு இருத்தல்
2) இறைபோசோம் இருத்தல்
3) பச்சையவுருவம் இருத்தல்
4) இழைமணி இருத்தல்
5) ஓர் இழையுருப் பதியவுடல் இருத்தல்

03. பின்வருவனவற்றுள் இழைய ஒழுங்கமைப்பைக் கொண்டிராதவை?
1) பற்றீரியா, பங்கசு.
2) பங்கசு, தாவரங்கள்.
4) தாவரங்கள், விலங்குகள்.
4) பற்றீரியா, தாவரங்கள்.
5) பங்கசு, விலங்குகள்.

04. நொதியங்களும் அவற்றின் உற்பத்திக்கு உதவும் நுண்ணங்கியும் தொடர்பான பின்வரும் தொடர்புகளுள் தவறானது?
1) அமிலேஸ் - ***Bacillus subtilis***
2) செலுலேஸ் - ***Aspergillus niger***
3) இன்வட்டேஸ் - ***E – coli***
4) இலிப்பேஸ் - ***Rhizopus spp***
5) புரத்தியேஸ் - ***Aspergillus oryzae***

05. விலங்குகள் தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் தவறானது?
1) சுறா, திருக்கை என்பன கசியிழைய அகவன்கூட்டைக் கொண்ட விலங்குகளாகும்.
2) பாரை, அறக்குளா என்பன என்பாலான அகவன்கூட்டைக் கொண்ட விலங்குகளாகும்.
3) இறால் நடக்கும் பாதங்கள், நீந்தும் பாதங்கள் என 10 சோடிப் பாதங்கள் கொண்டது.
4) கைற்றோசோன் உற்பத்திக்கு தேனீ உதவுகின்றது.
5) தேனின் கட்டமைப்பில் குளுக்கோஸ், தெக்கிரின், சுக்குரோஸ் என்பன அதிகளவில் காணப்படும்.

06. நீரின் நிலையில் வன்மைக்கு காரணமான சேர்வைகள் முறையே,
1) $NaCl, CaSO_4$
4) $Ca(HCO_3)_2, Mg(HCO_3)_2$
2) $CaSO_4, CaCl_2$
5) $MgSO_4, MgCl_2$
3) $CaSO_4, MgCl_2$

07. எதனோல் உற்பத்தி தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் தவறானது?
1) மதுவ அனுசேபச் செயன்முறையின் ஒரு பக்கவிளைவாகவும், கனிந்த பழங்களிலும் இயற்கையாக உற்பத்தியாகின்றது.
2) இதன் உற்பத்திக்கு ***Acetobacter*** அத்தியாவசியமானதாகும்.
3) ஒரு குளுக்கோஸ் மூலக்கூறானது இரு மூலக்கூறு எதனோலை உற்பத்தி செய்யும் அதேவேளை ஒரு சுக்குரோஸ் மூலக்கூறானது நான்கு மூலக்கூறு எதனோலை உற்பத்தி செய்யும்.
4) உயிர் இரசாயன முறையான எதனோல் தொகுப்பிற்கு இன்வட்டேஸ், சைமேஸ் நொதியங்கள் அத்தியாவசியமானதாகும்.
5) எதீனில் இருந்து இரசாயனமுறையில் எதனோல் உற்பத்தி செய்யமுடியும்.

08. பல்பகுதியங்கள் தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் தவறானது?
1) உயர் மீளியல்புள்ள பல்பகுதியப் பொருட்கள் இறப்பர்/இலாத்தமர் ஆகும்.
2) வரையறுக்கப்பட்ட மீளியல்புள்ள பல்பகுதியங்கள் பிளாஸ்டிக்கு ஆகும்.
3) **PE, PVC, PET, PP, PS** ஆகியவை பிளாஸ்டிக்கு திரவியங்களாகும்.
4) மீளியல்பற்ற உயர் இழுவிசையை சகிக்கத்தக்க பல்பகுதியத் திரவியங்கள் நார்கள் ஆகும்.
5) வெப்பமிளக்கும் பிளாஸ்டிக்கில் குறுக்குப் பிணைப்புகள் காணப்படுவதில்லை.

09. சவர்க்கார உற்பத்தி தொடர்பான பின்வரும் கூற்றுகளுள் தவறானது?
1) இது கிளிசரைட்டுக்களின் காரநீர்ப்பாகும்.
2) இங்கு **NaOH** ஓர் ஊக்கியாகப் பயன்படும்.
3) கொழுப்பமிலங்களின் சோடியம் உப்புக்களில், நீர் நாட்டமுள்ள தலையும் நீர் வெறுப்புடைய ஒரு வாலும் காணப்படும்.
4) மிகுதியாகவுள்ள **NaOH** ஐ நடுநிலையாக்க சித்திரிக்கமிலம் போன்ற மென்ன மிலங்கள் பயன்படும்.
5) சவர்க்காரத்தையும் நீர்மய உப்பையும் வேறாக்கிக் கொள்ள மையநீக்கச் செயன்முறை பயன்படும்.


10. தீந்தை உற்பத்தியின்போது தூய வெண்ணிறம், மஞ்சள் நிறம், கறுப்பு நிறம் என்பவற்றைப் பெறுவதற்கு பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் முறையே,
1) $TiO_2, FeO, ZnCrO_4$
2) C Black, $TiO_2, ZnCrO_4$
3) $ZnCrO_4, TiO_2, FeO$
4) $TiO_2, ZnCrO_4, Fe_2O_3$
5) $ZnCrO_4, TiO_2$, C Black

11. கொதிநீராவி காய்ச்சி வடிப்பு தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறானது,
1) சாறெண்ணைகளின் தயாரிப்பில் பயன்படும்.
2) இம்முறையில் கரைசல் தாழ்வெப்பநிலையில் கொதிப்பதால் சக்தி சேமிக்கப்படும்.
3) தனித்து வெப்பமேற்றப்படும் போது உயர்வெப்பநிலையில் அழிவடையக்கூடிய சேதனப் பதார்த்தங்கள், கரைசலில் தாழ்வெப்பநிலையில் கொதிப்பதால் அவை அழிவடையாது பாதுகாக்கப்படும்.
4) இறுதியில் ஏந்துகலனில் பெறப்படும் வடியில் சேதனப்பதார்த்தம், நீர் என்பன ஒன்றுட னொன்று ஏகவினமாகக் கலந்திருப்பதால் அவற்றை இலகுவாக நீர் மூலம் வேறாக்க லாம்.
5) பிரித்தெடுக்கப்படும் சேதனப்பதார்த்தங்களின் தொடர்புமூலக்கூற்றுத்திணிவை அறியப் பயன்படும்

12. காகித உற்பத்தி தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் தவறானது,
1) தாவரப்பகுதிகளில் உள்ள இலிக்னினை நீக்கி, செலுலோசு நார்களை வேறாக்கி வெளிற்றுதலே காகிதக்கூழ் தயாரிப்பு/கிராப்ட் தொழிற்பாடு (**Kraft Process**) எனப்படும்.
2) காகிதக்கூழ் தயாரிப்பதற்காக மரத்தூள், வைக்கோல், இயூக்கலிப்ரஸ் மற்றும் பைனஸ் மரத்துண்டுகள் (**Chips**) போன்றவை பயன்படுத்தப்படும்.
3) மரப்பகுதிகளில் ரெசின் பதார்த்தங்கள் அதிகளவில் காணப்படுமாயின் கூழ் தொழிற்பாடு சீராக்கப்படும்.
4) நிரப்பிப்பொருளாக கல்சியம் காபனேற்று, களி, தைத்தேனியம் ஈரொட்சைட்டு போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.
5) பிணைப்புக்காரணியாக பல்பகுதியக் கரைசல்கள் அல்லது "கஞ்சி"(starch) பயன்படுத்தலாம்.

13. அப்பற்றைற்றிலிருந்து நீரில் கரையுமியல்பு கூடிய பொஸ்பரசுப் பசளை உற்பத்தியின்போது பின்பற்றப்படும் நடைமுறைகள் தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் தவறானது?
1) சல்பூரிக்கமிலம்/ஐதரோகுளோரிக்கமிலம்/நைத்திரிக்கமிலத்துடன் தாக்கமடையவிடல்
2) சோடியங்காபனேற்றுடன் தாக்கமடையவிடல்
3) மெதனோலுடன் தாக்கமடையவிடல்
4) சர்ப்பன்ரைன் கனியத்துடன் தாக்கமடையவிடல்
5) முற்றா நிலக்கரியில் காணப்படும் சேதன அமிலங்களுடன் தாக்கமடையவிடல்

14. பின்வரும் சாறெண்ணெய்களில் அடங்கியுள்ள கூறுகள் **A, B, C, D** என்பன முறையே,




A B C D

1) இயூஜினோல், ஜெரனியோல், சினமல்டிகைட், சிற்றனெல்லோல்
2) சிற்றனெல்லோல், இயூஜினோல், சினமல்டிகைட், ஜெரனியோல்
3) ஜெரனியோல், இயூஜினோல், சிற்றனெல்லோல், சினமல்டிகைட்
4) இயூஜினோல், சினமல்டிகைட், ஜெரனியோல், சிற்றனெல்லோல்
5) ஜெரனியோல், இயூஜினோல், சினமல்டிகைட், சிற்றனெல்லோல்

15. உயிர்மூலக்கூறுகளில் காணப்படும் பிணைப்புக்கள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் தவறானது?
1) நீரில் H- பிணைப்புக்கள் காணப்படுகின்றன.
2) ஒருசக்கரைட்டுகளில் கிளைக்கோசிடிக் பிணைப்புக்கள் காணப்படுகின்றன.
3) இலிப்பிட்டுக்களில் எசுத்தர் பிணைப்புக்கள் காணப்படுகின்றன.
4) புரதங்களில் பெப்ரைட் பிணைப்புக்கள் காணப்படுகின்றன.
5) நியூக்கிளிக்கமிலங்களில் பொஸ்போ இரு எசுத்தர் பிணைப்புக்கள் காணப்படுகின்றன.

16. பின்வரும் கூற்றுக்களுள் தவறானது?
1) $SO_2, NO_2$ என்பன அமிலமழைக்குக் காரணமான வாயுக்களாகும்
2) மழைநீரின் **pH** ஆனது 5.7 இலும் அதிகரிக்கும்போது அமிலமழையாகக் கொள்ளப்படும்
3) CFC, NO என்பன ஓசோன் படை வறிதாக்கத்திற்குக் காரணமான வாயுக்களாகும்
4) ClO. சுயாதீன மூலிகமானது ஓசோன் பிரிகைக்கான ஊக்கியாகத் தொழிற்படும்
5) $CO_2, CH_4, N_2O$, நீராவி என்பன பூகோள வெப்பமாதலுக்குக் காரணமான வாயுக்களாகும்

17. இயற்கை உற்பத்தியாகிய துணையனுசேப விளைபொருட்களில் அடங்கும் பிரதான சேர்வை, மற்றும் பயன்கள் தொடர்பான பின்வருவனவற்றுள் தவறானது?

| | தாவர முதல்கள் | சேர்வை | பயன்பாடுகள் |
|---|---|---|---|
| 01) | தேயிலை | கபேன் | ஒட்சியேற்ற எதிரி |
| 02) | தேயிலை | பிளவனொயிட்டுக்கள் | குருதிச்சுற்றோட்டத்தை சீராக்குதல் |
| 03) | ஆடாதோடை இலை | வசிசின் மற்றும் வசிசினோல் | வலிநிவாரணி |
| 04) | கராம்பு எண்ணெய் | இயூஜினோல் | பற்பசை உற்பத்தி, சவர்க்கார உற்பத்தி |
| 05) | சிற்றனெல்லா புல் | ஜெரனியோல் | பூச்சி வெறுத்தொதுக்கி |

18. கீழே தரப்பட்ட இரசாயனத்தாக்கத்தில் 5 செக்கன்களில் அழிவடைந்த Al இன் அளவு 5.4g ஆயின், அக்குறிப்பிட்ட நேரத்தில் $H_2$ உருவாகும் வீதமாக அமைவது. (Al – 27)

$$Al_{(s)} + Hcl_{(g)} + \rightarrow ALCL_{3(s)} H2_{(g)}$$

1) 0.1 $mols^{-1}$
2) 0.2 $mols^{-1}$
3) 0.3 $mols^{-1}$
4) 0.04 $mols^{-1}$
5) 0.06 $mols^{-1}$

19. கணினியில் தரவுகளும் அறிவுறுத்தல்களும் எவ்வடிவத்தில் தேக்கி (Store) வைக்கப்படும்?
1) இருமம்
2) பதின்மம்
3) பதினறுமம்
4) எண்மம்
5) இரும குறியீட்டுத் தசமம்

20. ஒரு கணினியுடன் இணைக்கப்பட்ட ஒரு புதிய அச்சுப்பொறி உகந்தவாறு தொழிற்படுவதற்கு ஒரு விசேட மென்பொருளை நிறுவவேண்டும். இவ்விசேட மென்பொருள்,
1) ஒருங்கமைப்பான் (**Defragmenter**)
2) சாதன இயக்கி (**Device driver**)
3) கோப்பு முகாமையாளர் (**File manager**)
4) பணி முகாமையாளர் (**Task Manager**)
5) வட்டு வடிவமைப்பு (**Disk formatting**)

21. ஒரு சொல்முறை வழிப்படுத்திய ஆவணத்தில் உள்ள வெற்று அட்டவணைக்குப் பின்வரும் எவற்றைப் பயன்படுத்தலாம்?

A: அட்டவணையின் கலங்களுக்கு நிறமூட்டல்
B: அட்டவணையில் அடுத்துள்ள கலங்களை ஒன்றிணைத்தல்
C: அட்டவணைக்குள்ளே கலங்களை செருகல்

1) A மட்டும் 2) A, B ஆகியன மட்டும்
3) A, C ஆகியன மட்டும் 4) B, C ஆகியன மட்டும்
5) A, B, C ஆகியன எல்லாம்

22. ஒரு கணினியை ஆளியிட்டுத் தொடக்கிய பின்னர் பின்வரும் எது முதலில் தொழிற்படும்?

1) அடிப்படை உள்ளீட்டு வெளியீட்டு முறைமை (BIOS)
2) வட்டுப்பிரிவிடற் கருவி (Disk Partitioning tool)
3) பணிசெயல் முறைமை (Operating System)
4) பணி முகாமையாளர் (Task Manager)
5) சாதன இயக்கி (Device driver)

23. "ஒட்டுதல்" என்ற கட்டளைக்கான குறுக்குச்சாவி.

1)Ctrl + V 2) Ctrl + C 3) Ctrl + O 4) Ctrl + N 5) Ctrl + X

24. சொல்முறைவழிப்படுத்தலில் சொற்களை அலங்கரிப்பதற்கு பயன்படுத்தப்படும் கருவி யாது?

1) Word Art 2) Font 3) Bold 4) Font Size 5) Italic

25. ஒரு கணினியில் உறுதியாகத் தரவுகளைத் தேக்கி வைப்பதற்கு (Store) பின்வருவனவற்றுள் எது உகந்தது?

1) பதுக்கு நினைவகம் (Cache memory) 2) வன்வட்டு (Hard disk)
3) தற்போக்குப் பெறுவழி நினைவகம் (RAM)
4) காணொளி நினைவகம் (VGA)
5) பதிவகம் (Register)

26. பின்வரும் சாதனங்களை (Devices) கருதுக.

A: சுட்டி B: தொடுதிரை C: எழுதத்தக்க புற DVD வட்டு

மேலுள்ளவற்றுள் எவை உள்ளீட்டு சாதனமாகவும், வெளியீட்டு சாதனமாகவும் பயன்படுத்தப்படலாம்?

1) A மட்டும் 2) A,B மட்டும் 3) A,C ஆகியன மட்டும்
4) B, C ஆகியன மட்டும் 5) A, B, C ஆகியன எல்லாம்

27. பின்வருவனவற்றுள் சரியான கலமுகவரி யாது?

1) 5AB 2) $8$A 3) $B$10 4) A5B 5) 8$AB

28. கலம் C2 இல் =A$1*$A2 எனும் சூத்திரம் காணப்படுகிறது. இதனை கலம் D2 இற்குப் பிரதி செய்யின் கிடைக்கப்பெறும் வருவிளைவு யாது?

1) 110 4) 100
2) 220 5) 125
3) 0

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| 1 | 10 | 20 | 5 | |
| 2 | 11 | | 110 | |
| 3 | 5 | 4 | 5 | |

29. அடிமுக்கோணப் பரப்பு $31.5cm^2$ உம், உயரம் 22cm உம், உடைய அரியம் நீரால் முற்றாக நிரம்பியுள்ளது. இதனை 7cm ஆரையுடைய உருளையினுள் ஊற்றும்போது உருளையினுள் நீரின் உயரமாக அமைவது. ($\pi = 22/7$)


1) 15.6cm 2) 16.5cm 3) 4.5cm 4) 22.0cm 5) 1.5cm

30. 7cm ஆரையும், h உயரமும் உடைய உருளையின் கனவளவு $3080cm^3$ எனின், உருளையின் மேற்பரப்பளவு,

1) $44 \times 27\ cm^2$ 2) $44 \times 77\ cm^2$ 3) $11 \times 4/7\ cm^2$
4) $44 \times 22/7\ cm^2$ 5) $44 \times 7 \times 11/4\ cm^2$

31. காட்டப்பட்ட அரியத்தின் மேற்பரப்பளவு, கனவளவு என்பன முறையே,

1) $1080\ cm^2, 828cm^3$ 2) $828\ cm^2, 1080cm^3$
3) $1080\ cm^2, 408cm^3$
4) $828\ cm^2, 408cm^3$ 5) $828\ cm^2, 480cm^3$




32. குண்டெறிதல் போட்டி ஒன்றில் பயன்படுத்தப்பட்ட சீரான குண்டின் ஆரை r ஆகும். இவ்வாறான 4 குண்டினை உருக்கி அதே ஆரையுடைய 16 உருளைகள் செய்யப்பட்டது ஆயின் உருளையின் உயரமாக அமைவது.

1) r 2) r/2 3) r/3 4) 2r 5) 3r

33. நிலமட்டத்திலிருந்து கட்டடமொன்றின் உயரம் 280m ஆகும். ஒரு சிறுவன் கட்டடத்தின் அடியிலிருந்து இடதுபுறமாக நகர்ந்து சென்று ஒரு குறிப்பிட்ட தூரத்தில் நிற்கின்றான். கட்டடத்தின் உச்சியில் நிற்கும் ஒருவனுக்கு 60° இறக்கக்கோணத்தில் சிறுவன் தென்படுகின்றான் எனின், கட்டடத்தின் நடுவில் நிற்பவருக்கு அச்சிறுவன் எவ்வளவு இறக்கக்கோணத்தில் தென்படுவான்?

1) $tan^{-1}(2\sqrt{3})$ 2) $tan^{-1}(\sqrt{3}/2)$ 3) $tan^{-1}(\sqrt{3}/3)$
4) $tan^{-1}(4\sqrt{3}/3)$ 5) $tan^{-1}(2\sqrt{3}/3)$

34. ஒரு கூம்பின் பரிதியின் நீளம் $16\pi$ cm ஆகும். அதன் சாயுரம் 10cm எனின், கூம்பின் செங்குத்துயரமாக அமைவது.

1) 3 cm 2) 5 cm 3) 6 cm 4) 8 cm 5) 12 cm

35. இணைகரம் ABCD இன் மூலைவிட்டங்கள் AC, BD இன் நீளங்கள் முறையே 12cm,16cm ஆகும். AB = 10cm எனின், <DAC இன் பெறுமதி,

1) 45 2) 60 3) $tan^{-1}(4/3)$ 4) $tan^{-1}(1/2)$ 5) $tan^{-1}(5\sqrt{3})$

36. ஒரு குண்டானது கிடையுடன் குறிப்பிட்டதொரு கோண சாய்வுடன் சுடப்படுகின்றது. குண்டின் தொடரும் இயக்கம் ஒரு பரவளைவுப் பாதையாகும். அப்பாதையின் சமன்பாடு $Y = -X^2 + 4X + 10$ ஆகும். நிலமட்டம் X அச்சு எனின், குண்டின் அதியுயர் உயரம்,

1) 12 2) 13 3) 14 4) 15 5) 16

37. ஒரு பாடசாலையில் 40 பிள்ளைகளின் இடைத்திணிவு 50kg ஆகும். புதிதாக சமநிறைகளையுடைய இரண்டு மாணவர்கள் புதிதாகச் சேர்ந்ததும் இடைநிறையில் மாற்றம் ஏற்படவில்லை எனின், புதிதாக சேர்ந்த மாணவன் ஒருவனின் திணிவு,

1) 25kg 2) 30kg 3) 50kg 4) 75kg 5) 100kg

38. 5, 3, 1, 3, 9, 6, 8, 9, 11, 10, 12 எனும் தரவு மாதிரியின் காலணை இடைவீச்சு,

1) 1 2) 3 3) 7 4) 9 5) 11

39. வெப்பக்கணியத்தின் SI அலகு,

1) K 2) W 3) Cal 4) J 5) cd

40. திணிவு M ஆக உள்ள பொருள் ஒன்றின் வேகம் V இல் இருந்து 3V வரை அதிகரிக்கின்றது. இவ்விரு சந்தர்ப்பங்களிலும் அப்பொருளின் இயக்கசக்திக்கிடையிலான விகிதத்தைத் தருவது.

1) 1: 4 2) 1: 3 3) 3:1 4) 9:1 5) 1: 9

41. அமிழ்ப்புவெப்பமாக்கி ஒன்றில் 230V, 1000W, 50Hz என குறிக்கப்பட்டிருந்தது. இது 230V மின்முதலுடன் தொடுக்கப்படுமாயின், இதனூடு செல்லும் உயர் மின்னோட்டமும், தடையும் முறையே,

1) 0.23A, 53Ω 2) 4.35A, 53Ω 3) 20A, 53Ω
4) 0.23A, 20Ω 5) 4.35A, 20Ω

42. சீரான குறுக்குவெட்டுப்பரப்புடைய **10cm** நீளமான அலுமினியக் கம்பியொன்றின் தடை 5Ω ஆகும். அலுமினியத்தின் தடைத்திறன் 2.5Ω10-8 Ωm எனின், அக்கம்பியின் குறுக்குவெட்டுப்பரப்பு?

1) $1.25 \times 10^{-8} m^2$ 2) $1.25 \times 10^{-11} m^2$ 3) $12.5 \times 10^{-10} m^2$
4) $2.5 \times 10^{-8} m^2$ 5) $5 \times 10^{-10} m^2$

43. 500g திணிவும், 6m ஆரையுமுடைய வட்டத்தட்டொன்று 30m/s மாறாகதியுடன் சுழல்கின்றது எனின், அதன் கோணவேகம், சுழற்சி, இயக்கசக்தி என்பன முறையே. (வட்டத்தட்டின் சடத்துவத்திருப்பம் - $mr^2/2$)

1) 15rad/s, 225J 2) 15rad/s, 112.5J 3) 5rad/s, 225J
4) 5rad/s, 112.5J 5) 0.8rad/s, 112.5J


44. குறுக்குவெட்டுப்பரப்பு $1.0\ cm^2$ ஐ உடைய பெருநாடி ஒன்று, ஒவ்வொன்றும் $0.6cm^2$ உடையதும் ஓரலகு நேரத்தில் சமகனவளவு குருதியை காவுகின்றதுமான 12 சிறிய நாடிகளாகப் பிரிகின்றது. பெருநாடியிலுள்ள குருதியின் கதிக்கும், ஒரு சிறிய நாடியிலுள்ள குருதியின் கதிக்குமான விகிதமாக அமைவது.

1) 0.05 2) 0.14 3) 2.0 4) 7.2 5) 20

45. ஒரு கம்பிச்சுருள் $0^0C$ இல் 50Ω தடையை உடையது. உருகும் திரவமொன்றினுள் கம்பிச்சுருள் அமிழ்த்தப்பட்ட போது கம்பிச்சுருளின் தடை 115Ω இற்கு அதிகரிக்கின்றது. கம்பிச்சுருளின் தடைவெப்பநிலைக்குணகம் $4.0 \times 10^{-3}\ {}^0C^{-1}$ ஆயின், திரவத்தின் உருகுநிலையாக அமைவது.


1) $225^0C$ 2) $325^0C$ 3) $475^0C$ 4) $575^0C$ 5) $598^0C$

46. புறக்கணிக்கத்தக்க அகத்தடை கொண்ட ஒரு பற்றரியுடன் இரு சமதடைகள் தொடராகத் தொடுக்கப்பட்டிருப்பதை உரு (A) காட்டுகின்றது. இந்நிலையில் தடைகளில் விரயமாகும் வலு 15W ஆகும். இவ்விரு தடைகளும் உரு (B) இல் காட்டியவாறு அதே பற்றரியுடன் சமாந்தரமாகத் தொடுக்கப்படின், ஏற்படும் மொத்த வலுவிரயம்?




1) 7.5W 2) 15W 3) 30W 4) 45W 5) 60W

47. படத்தில் காட்டியவாறு பொருளொன்று திரவமொன்றினுள் பகுதியாக அமிழ்ந்து மிதக்கின்றது. இதனுடன் தொடர்பான பின்வரும் கூற்றுக்களுள் சரியானது?



1) பொருளின் அடர்த்தி திரவத்தின் அடர்த்திக்குச் சமனாகும்.
2) பொருளின் அடர்த்தி திரவத்தின் அடர்த்தியிலும் அதிகமாகும்.
3) திரவத்தினால் ஏற்படுத்தப்படும் மேலுதைப்பு பொருளின் மொத்த நிறைக்குச் சமனாகும்.
4) பொருளினால் இடம்பெயர்க்கப்படும் திரவத்தின் கனவளவு பொருளின் மொத்தக் கனவளவிற்குச் சமனாகும்.
5) பொருளினால் இடம்பெயர்க்கப்படும் திரவத்தின் நிறை பொருளின் திரவத்தில் அமிழ்ந்திருக்கும் பகுதியின் நிறைக்குச் சமனாகும்.

48. மீள்தன்மை இழையொன்றில் விகிதசம எல்லையினுள் வெவ்வேறு திணிவுகள் தொங்கவிடப்பட்டு ஏற்பட்ட நீட்சிக்கும் தொழிற்பட்ட விசைக்குமான வரைபு வரையப்பட்ட போது அது பின்வருமாறு அமைந்திருந்தது. இவ்விழையில் 5kg திணிவு தொங்கவிடப்படும் நிலையில் இழையில் சேமிக்கப்படும் மீள்தன்மை அழுத்த சக்தியாக அமைவது.

1) $175.0 \times 10^{-3}J$
2) $187.5 \times 10^{-3}J$
3) $200.0 \times 10^{-3}J$
4) $18.75 \times 10^{-3}J$
5) $150.0 \times 10^{-3}J$





49. 250kg திணிவுடைய கல்லொன்றை உயர்த்துவதற்காக கோலொன்றை பயன்படுத்தும் விதம் உருவில் தரப்பட்டுள்ளது. இதன்பொருட்டு கோலின் முனை A இன் மீது பிரயோகிக்க வேண்டிய விசையின் இழிவுப்பெறுமானம் யாது?

1) 50N 2) 100N
3) 500N 4) 2500N
5) 5000N



50. காவலிடப்பட்ட செப்புக் கம்பிச்சுருளுடன் மையப்பூச்சியக் கல்வனோமானியொன்று இணைக்கப்பட்டுள்ள போது பின்வரும் செய்கைகள் செய்யப்பட்டன.

A. சுருளுக்குக் கிட்டவாக காந்த வடமுனையைக் கொண்டு செல்லுதல்.
B. சுருளிலிருந்து அப்பால் சட்ட காந்தத்தின் தென்முனையைக் கொண்டு செல்லுதல்.
C. சுருளினுள் சட்டக்காந்தமொன்றின் தென்முனையை அசைக்காமல் வைத்திருத்தல்.
D. அசையாமல் இருக்கும் சட்டக்காந்தத்தின் வடமுனையை நோக்கி சுருளை அசைத்தல்.



மேற்படி எச்சந்தர்ப்பத்தில்/சந்தர்ப்பங்களில் கல்வனோமானியில் திரும்பல் நிகழும்?

1) A, B, C மூன்றிலும் 2) A, B, D மூன்றிலும்
3) C யில் மட்டும் 4) Dயில் மட்டும் 5) எல்லாச் சந்தர்ப்பங்களிலும்